DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004 | BRAMPTON / MISSISSAUGA 905 457 1700 | MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

For Your Rental Needs
iHOME Rentals
416-703-7300 | info@ihomerentals.ca

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan Sales Representative — kailain.thillai@gmail.com | homesbyraghu@gmail.com — Ragu Thillainathan Sales Representative

இவ்விடத்தில் விளம்பரம் செய்ய எம்மை அழையுங்கள் 416-752-1524

PYRAMID GROUP
UTHAYAN 416.301.5555
RAJ 416.843.3333
KUMAR 416.453.7777

List Your Property Free
PROPERTYMAX.LK
+94772332300

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
Raj Perampalam Broker
என்னை அழையுங்கள்
Direct: 416-897-9155
Office: 905-201-9977

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Family sponsorship; Super visa for parents and grandparents including health insurance; Citizenship; Permanent resident card renewal;
Kokulan Baskaran Tax Consultant
403-2855 Markham Road Scarborough ON M1X 0C3
Tel: 647-344-6600
info@allinoneserves.ca
www.allinoneservices.ca

Residential & Commercial Real Estate Services
Bala Logendralingam Realtor
Cell: 647-447-1562
RE/MAX COMMUNITY

29ம் ஆண்டில்...
29 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
# உதயன்
திக்கெட்டும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்
Member of National Ethnic Press and Media Council of Canada
Canada's Other Voices
$1.00
416-752-1524 www.uthayannews.ca
Canadian Media Circulation Audit
உதயம் 1538 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday September 26, 2025

# எதிர்கால சந்ததியினருக்குப் பாதுகாப்பான உலகை உருவாக்க முழு மனதுடன் உறுதியெடுப்போம்

## ஐக்கிய நாடுகள் சபையில் இலங்கை ,ஜனாதிபதி அநுர குமார திசநாயக்க உலகத் தலைவர்கள் மத்தியில் உரையாற்றும் போது அழைப்பு!



(கொழும்பிலிருந்து எமது செய்தியாளர் விஜேய்)

எதிர்கால சந்ததியினருக்கு பாதுகாப்பான உலகை உருவாக்குவதற்கு முழு மனதுடன் அர்ப்பணிப்போம் என ஐக்கிய நாடுகள் சபையின் 80 ஆவது பொதுச் சபை அமர்வில் உரையாற்றிய இலங்கையின் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க, உலகத் தலைவர்களுக்கு அழைப்பு விடுத்தார்.


மேற்படி தனது உரையின் போது, ஒருவருக்கொருவர் எதிராகச் செல்வதற்குப் பதிலாக, ஒருவருக்கொருவர் கைகோர்த்துச் செல்லும் பயணத்தை நாம் மேற்கொள்ள வேண்டும் என்றும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் 80 ஆவது அமர்வு, நியூயோர் நகரில் ஐக்கிய நாடுகள் சபை தலைமையகத்தில் ஆரம்பமானதுடன், இலங்கை நேரப்படி 25ம் திகதி காலை ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க அமர்வில் உரையாற்றினார்

(தொடர்ச்சி 19ம் பக்கம்)

# தியாக தீபம் திலீபன் யாருக்காவது தனியுரிமைச் சொத்தா?

## எதிரிகள் கூட அஞ்சலி செலுத்துவதுதான் அந்த தியாகியான வீரனுக்கு கிடைக்கும் உயர்ந்தபட்ச கௌரவம்.!



செம்மணிக்கு அஞ்சலி செலுத்த வந்த அமைச்சரை அஞ்சலி செலுத்த விடாது விரட்டி விட்டு யாழ்ப்பாணம் வந்த ஜனாதிபதி செம்மணிக்கு வரவில்லையென ஒப்பாரி வைத்தனர். இப்போது திலீபனுக்கு அஞ்சலி செலுத்த வந்த அமைச்சரை மீண்டும் விரட்டியுள்ளனர்.திலீபனை உரிமை கொண்டாட இவர்கள் யார்? திலீபனுக்கு அஞ்சலி செலுத்த யார் வரலாம் யார் வரக்கூடாது என்பதனை தீர்மானிக்க இவர்களுக்குள்ள உரிமை என்ன?ஒரு தியாகிக்கு ,வீரனுக்கு எதிரிகூட அஞ்சலி செலுத்த முடியும். அவ்வாறு எதிரிகள் கூட அஞ்சலி செலுத்துவதுதான் அந்த தியாகி, வீரனுக்கு கிடைக்கும் உயர்ந்தபட்ச கௌரவம். -----கே.பாலா

(தொடர்ச்சி 15ம் பக்கம்)

சிறு கற்கள் கொண்டு பெரும் சரித்திரம் படைப்போம்.
சிறு துளி பெரு வெள்ளம்
நாம் ஒன்றாய் சேர்ந்து கட்டி முடிப்போம்..
தமிழ் சமூக மையம் Tamil Community Centre

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
107 Dundas St, East, Mississauga, ON, L5A 1W7 — 905-272-1222
23-8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1 — 905-794-4404
online service: www.remitbee.com

அதிவிரைவான அகதிக்கோரிக்கை விண்ணப்பங்கள் உள்ளடங்கலான சகலவிதமான Immigration சேவைகளுக்கும்
Prime Legal Services
(Eraa Supermarket Plaza)
5928 Finch Avenue E, Unit 231
905-334-6851

VOTE

COUNCILLOR | கவுன்சிலர்

# Dr. Anu **Sriskandarajah**

# அனு **ஸ்ரீஸ்கந்தராஜா**

- Scarborough–Rouge Park வட்டாரத்தில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட டொராண்டோ கல்விச் சபை (TDSB) உறுப்பினர் (2018 - Present)
- பேராசிரியர் (யோர்க் பல்கலைக்கழகம்)

## என்னுடைய முன்னுரிமைகள்

- நாம் செலுத்தும் வீட்டு வரி (Property Tax) மூலமாக எங்கள் வட்டாரத்திற்குரிய தேவைகளைப் பூர்த்தி செய்வேன்.
- அதிகரித்து வரும் குற்றச்செயல்களை தடுக்க காவல்துறையுடன் இணைந்து செயற்படுவேன்.
- மூத்தோர் சமூகமாகவும் மகிழ்ச்சியாகவும் வாழத் தேவையான சகல சேவைகளும் கிடைப்பதை உறுதி செய்வேன்.



"உயர்கல்வியுடனும், சிறந்த அனுபவத்துடனும், தமிழ்ப்பண்புகளின் உயர்ந்த மதிப்புகளுடனும் கூடியவராக அவரை நாங்கள் அறிந்திருக்கிறோம். எமது சமூகத்திற்குத் தேவையான சரியான நோக்கும், பணி நோக்கும் கொண்ட சிறந்த வேட்பாளர் அவரே என நாங்கள் நம்புகிறோம். அவருக்காக நீங்கள் அனைவரும் ஆதரவு அளித்து, வாக்களிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்."



**Dr. Aruna and Dr. Lambotharan**
Legacy Medical Centre



"அனு அக்காவுடன் சேர்ந்து நாம் டொரோண்டோ கல்விச் சபையில் பல விடயங்களை சாதித்துள்ளோம். சமூக நலனுக்கான அவரின் தலைமைத்துவத் திறன் அவரை ஒரு சிறந்த சமூக சேவையாளராக உருவாக்கியுள்ளது. வருங்காலத் தலைமுறையினருக்கு முன்மாதிரியாகத் திகழும் நேர்மையான பெண் தலைமைத்துவம் அவர்."

**Yalini Rajakulasingam**
TDSB Trustee - Scarborough North

**Vote #20**

DrAnu.ca | 416-907-4437 | voteanu@outlook.com

Canada
We acknowledge the financial support of the Government of Canada

Single Copy $1 Annual Subscription Price $52.00

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் | உதயன் | Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Arjune
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON MIC 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

## உதயன் கதிரோட்டம்

# வாகன ஓட்டுனர்களின் வேகத்தைக் கட்டுப்படுத்த கெமாராக்கள் மூலம் நகரசபைகள் குற்றப்பணம் அறவிடுவதை தவறு என்று குறிப்பிடும் ஒன்றாரியோ மாகாண முதல்வர்!

உலகெங்கும் உள்ள நாடுகளில் காணப்படுவது போன்றே கனடாவிலும் பெரும் நகரங்களில் வாகன நெறிசல்கள் அதிகம் காணப்படுகின்றன. அதற்கு காரணங்களாக நாம் பலவற்றை எடுத்துக் கொள்ளலாம்.

குடிவரவாளர்கள் வருகை எண்ணிக்கையில் அதிகரிப்பு. வாகன உற்பத்தி அதிகரித்து சலுகை விலைகளில் புதிய வாகனங்களைக் கொள்வனவு செய்யக்கூடிய வாய்ப்புக்கள் மற்றும் மேலும் பல காரணங்களை நாம் அடுக்கிக்கொண்டு போகலாம்.

அதிகளவு புதிய குடிவரவாளர்கள் ஒன்றாரியோ மாகாணத்தில் வந்து அதை தங்கள் வதிவிடமாகக் கொண்டு தங்களை நிலை நிறுத்திக் கொள்ள முயன்று வருகின்றனர். அந்த வகையில் அவர்களில் பலருக்கு வாகனம் ஒன்றின் தேவை மிக அவசியமாகின்றது. இவ்வாறான ஒன்றாரியோ மாகாணத்தின் பல நகரங்களில் வாகன நெறிசல் அதிகமாகி அனைவருக்கும் அது ஒரு பாரிய சவாலாகவும் விளங்குகின்றது. .

இவ்வாறான நிலையில் ஒன்றாரியோ மாகாணத்திலும் அதன் நகரங்களிலும் மக்கள் இயல்பான வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருக்க ஆங்காங்கே சமூக விரோதச் செயல்கள் மற்றும் கொலைகள் மற்றும் கொள்ளைகள் வாகனத் திருட்டுக்கள் என குறைந்த எண்ணிக்கையில் இடம்பெறுவதை பொதுமக்களும் அரசியல்வாதிகளும் பாதுகாப்புப் பிரிவினரும் அவதானித்த வண்ணம் இருந்தார்கள். ஆனால் அண்மைக்காலத்தில் ஒன்றாரியோ மாகாணத்தில் தலை நகரமாக விளங்கும் ரொறன்ரோ பெரும்பாகம் மற்றும் அதனை அண்டியுள்ள ஏனை பெருநகரங்களில் நாம் மேற்குறிப்பிட்ட சமூக விரோதச் செயல்கள் அதிகரித்து வண்ணம் எண்ணிக்கையில் பெருகி மக்களின் இயல்பான வாழ்க்கை பாதிக்கப்படத் தொடங்கியது. இதனால். கனடாவையும் ஒன்றாரியோ போன்ற மாகாணங்களையும் வாழ்வதற்கு சிறந்த இடங்கள் என்ற நம்பிக்கையில் இந்து தொடர்ச்சியாக வந்துகொண்டிருக்கும் குடிவரவாளர்கள் பலர் திகைத்த வண்ணம் தங்கள் கனடிய வாழ்வை பதட்டத்துடன் மேற்கொள்சவதை நாம் அனைவரும் அவதானித்தும் அனுபவித்தும் வருகின்றோம்.

இவ்வாறான தொடர்ச்சியான கால ஓட்டத்தில் இங்கு வன்முறைகளும் சமூக விரோதச் செயற்பாடுகளும் திருட்டுக்களும அதிகரித்த வண்ணம் உள்ளன. சமூக விரோதச் செயற்பாடுகளில் ஈடுபடுபவர்கள் அனைவரும் தங்களை காப்பாற்றிக் கொள்ளவும் அதே நேரத்தில் பாதிப்புக்கு உள்ளாகும் அப்பாவி மக்களை பயமுறுத்துவதற்காகவும் துப்பாக்கி போன்ற பயங்கரமான ஆயுதங்களையும் எந்நேரமும் தங்கள் வசம வைத்திருக்கின்றனர்.

இதன் மறுபக்கத்தில் ரொறன்ரோ நகர சபை உட்பட அதனைச் சுற்றியுள்ள நகரங்களிலும் வாகனங்களின் வேகத்தைக் கட்டுப்படுத்தும் கெமாராக்கள் வீதிகளில் பல இடங்களில் நிறுவப்பெற்றுள்ளன. இதன் மூலம் வாகனங்கள் வேகமாக பயணிப்பதை கட்டுப்படுத்தவும் அவ்வாறு கட்டுப்பாடுகளை மீறி வாகனங்களை வேகமாகச் செலுத்தும் சாரதிகளுக்கு குற்றப்பணம் அறவிடுவ-தையும் நகர சபைகள் தங்கள் அதிகாரத்திற்கு உட்பட்ட ஒரு பணியாகச் செய்து வந்தன.

ஆனால் பல காரணங்களுக்காக தங்கள் வாகனங்களை வேகமாகச் செலுத்தும் சாரதிகள் எந்த வகையிலும் மேற்படி கெமராக்களின் "பிடி"யிலிருந்து தப்பி விட முடியாத அளவிற்கு நகரசபைகளின் தொழில்நுட்பம் சிறப்பானதாக இருந்து வந்தது. எனினும் இவ்வாறான கெமராக்களின் "பிடிக்குள்" அகப்படும் சாரதிக-ளில் பலர் சாதாரண பிரஜைகளாக இருந்தாலும் நாம் முன்னர் குறிப்பிட்ட சமூக விரோதச் செயற்பாடுகளில் ஈடுபடுபவர்களான அந்த குற்றவாளிகள் கூட தங்களை காப்பாற்றிக் கொள்ளவும் குற்றத்தின் பிடியிலிருந்து தாங்கள் தப்பித்துக் கொள்ளவும் மேலும் வன்முறை சார்ந்த தங்கள் தவறான உத்திகளைப் பயன்படுத்தத் தொடங்கியுள்ளார்கள். அந்த மாபெரும் பாதகமான செயல்களே. வீதி ஓரங்களில் உள்ள வாகன வேகத்தை அவதானிக்கும் கெமராக்காளை சேதப்படுத்தியும் அவற்றை வீழ்த்திவிடுவதுமான சட்ட விரோத மற்றும் அரச விரோதச் செயல்களை செய்யத் தொடங்கியுள்ளார்கள்.

இவ்வாறான நிலையில் ரொறன்ரோ மாநாகத்தினதும் மற்றும் பல நகரங்களினதும் மேயர்கள் கூடி இவ்வாறான பாதகமான குற்றங்களை எவ்வாறு தடுக்கலாம் என்று ஆலோசனைகளை நடத்திக் கொண்டிருக்க ஒன்றாரியோ மாகாணத்தின் முதல்வர் தனது அதிகாரத்தைப் பாவித்து தவறான ஒரு யோசனையை முன்வைத்துள்ளார். வீதிகளில் இனிமேல் வாகனங்களின் வேக அதிகரிப்பை கணிக்கும் கெமாராக்கள் அனைத்தையும் முற்றாக அகற்ற வேண்டும் என்று கடுந்தொனியில் தெரிவித்துள்ளார். ஆனால் அரசியல் தலைவர்கள் ஒன்றை மறந்து விட்டார்கள். இவ்வாறான நகரங்களில் தஙகள் வசம் துப்பாக்கிகளையும் மற்றும் ஆயுதங்களையும் வைத்திருந்த வண்ணம் சமூக விரோதச் செயல்களிலும் கொலை கொள்ளை மற்றும் வாகனத் திருட்டுக்கள் போன்றவ்றறில் தொடர்ச்சியாக ஈடுபட்டு வரும் சமூக விரோதக் குழுக்கள் மற்றும் கொலைஞர்கள் தங்களை காப்பாற்றிக் கொள்வதற்காகவே வீதிகளில் காணப்படும் வேகத் தடுப்பு கெமராக்கள் இயங்காமற் செய்கின்றார்கள் என்பதை பலர் சுட்டிக்காட்டியுள்ளார்கள்.

இவ்வாறாக வீதிகளில் உள்ள கெமராக்களை அகற்றும் ஒன்றாரியோ மாகாண முதல்வரின் அறிவிப்பானது அவரது மாகாணத்தில் மேலும் குற்றச் செயல்கள் அதிகரிக்கவும் குற்றவாளிகள் தப்பித்துக் கொள்ளவும் அதே நேரத்தில் "அப்பாவி மக்கள்" மேலும் பாதிப்படையவும் வழிவகுக்கும் என்பதை நாம் இவ்வாரக் கதிரோட்டத்தின் மூலம் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.!




Private Room for Rent
LOCATION: Bridletowne Cir, Toronto, ON. Canada
1 private bedroom available, rent + utilities.
Preferred for working individuals.
- Kitchen Shared
- Internet Included
- Car park: separate, rent for $100
- Rent: Negotiable
- Available: August 1st
- Bathroom: yes
- Utilities: separatet

கனடிய செய்திகள்
Canadian News

# கனடாவில் கோலாகலமாக ஆரம்பமாகிய மூன்று நாள் "அனைத்துலக திருக்குறள் மாநாடு"

தாயகத்தின் சமூக மற்றும் சமயச் செயற்பாட்டாளரும் மனித நேயப் பணியாளருமான ஆறு. திருமுருகன் அவர்கள் மற்றும் உலகப் புகழ்பெற்ற பேச்சாளர் பேராசிரியை பர்வின் சுல்தானா அவர்கள் ஆகியோரின் வருகையும் உரைகளும் கலந்து கொண்டவர்களின் மனங்களை குளிர்மைப்படுத்தின.

6 ஆவது உலகத் திருக்குறள் மாநாடு 2025, கனடா செப்டம்பர் 19, 20, 21 ஆகிய 3 நாட்கள் தொடக்க விழா செப்டம்பர் 19ம், 2025 வெள்ளிக்கிழமை, Highland Hall, University of Toronto, Scarborough.

19-09-2025 வெள்ளிக்கிழமை காலை 9.00 மணிக்கு திருவள்ளுவரின் உருவப்படத்தைத் தமது கைகளில் ஏந்திய வண்ணம் திருக்குறள் மாநாட்டுக் குழுவினர் மற்றும் வெளிநாடுகளிலிருந்து வருகை தந்துள்ள பேச்சாளர்கள் மற்றும் அறிஞர்கள் மற்றும் கனடா வாழ் கலை இலக்கியப் பிரமுகர்கள் மற்றும் செயற்பாட்டாளர்கள் ஆகியோர் விழா மேடை நோக்கி அணிவகுத்து நடந்து வந்தனர்.

மங்கள இசையை டாக்டர் நரேந்திரன் பஞ்சாபிகேசன், செல்வன் நிருப்ன நாகேந்திரன், செல்வன் சூரியகுமார் ஜெயராமன், செல்வன் நிர்மலன் நாகேந்திரன் வாசித்தனர். காலை 9.30 முதல் 10.00 மங்கள விளக்கேற்றல் நிகழ்ந்தது. தேசிய கீதம், தமிழ்த்தாய் வாழ்த்து, நாட்டுக்கு நன்றி செல்வி கிரேஸ்னி நாதன் அவர்கள் பாடினார். அகவணக்கம் நிகழவும் நடைபெற்றது.

மாநாட்டு அறிமுகத்தை திரு. சிவன் இளங்கோ அவர்கள் நிகழ்த்தினார்கள். வரவேற்புரையை மருத்துவர் இராமநாதன் இல்ம்போதரன் அவர்களும், ஆசியவியல் நிறுவனத்தின் செய்தியை முனைவர் ஜி. ஜான் சாமுவேல் நிகழ்த்தினார்கள்.

வாழ்த்துரைகளை பேரா. லிண்டா ஜான்சன், முதல்வர் ரொரொன்றோ பல்கலைக்கழகம், ஸ்கார்பரோ பேரா. சித்தார்த்தன் மௌனகுரு, தமிழ் இருக்கை ரொரொன்றோ பல்கலைக்கழகம். முனைவர் வடிவேலு சாந்தகுமார் ஈகை அறக்கட்டளை திரு. சுப்பிரமணியம் இராசரத்தினம், கனடா; முனைவர் செல்வநாயகி சிறிதாஸ், கனடாஸ; பேரா. இளையதம்பி பாலசுந்தரம், கனடா; முனைவர் பிரெண்டா பெக், கனடா; திரு. இராஜன் பிலிப்ஸ், கனடா; திரு. டென்னிசன் ஜெயசூர்யா, மலேசியா; திரு. கந்தையா இராஜமனோகரன், இங்கிலாந்து மருத்துவர் விஜய் ஜானகிராமன், அமெரிக்கா; பேரா. பர்வீன் சுல்தானா, இந்தியா; டாக்டர் ஆறு. திருமுருகன், இலங்கை; முனைவர் இராசேந்திரன் கவுண்டர், தென்னாபிரிக்கா; திரு. குமார் புனிதவேல், கனடா ஆகியோர் வழங்கினார்.

ஆய்வரங்க அறிமுகம், முனைவர் இல. சுந்தரம், திருமதி. கண்மணி அலோஷியஸ் ஆகியோர் செய்தனர். மாநாட்டு மலரை திரு. சிவபாலு மாஸ்டரும், முனைவர் உதயன் துரைராசா அவர்களும், திரு. வின் மகாலிங்கம் அவர்களும் வெளியிட்டு வைத்தனர். நிகழ்ச்சிகளை திரு. ரமணன் சந்திரசேகரமூர்த்தி தொகுத்து வழங்கினார்.

முதன்மை அமர்வு ஒன்றில், முதலில் அருட்தந்தை பேரா. ஜோசப் சந்திரகாந்தன் அவர்கலும், பேரா. சேரன் அவர்களும், பேரா. பாலசுந்தரம் இளையதம்பி அவர்களும் உரை நிகழ்த்தினார்கள். உணவு இடைவேளையின் பின்னர் முதன்மை அவர்வு இரண்டில், திரு. தாமஸ் ஹிட்டோஷி புருக்ஸ்மா, பேரா. டேனியல் ஜெயராஜ், முனைவர் பிரெண்டா பெக், முனைவர் டென்னிசன் ஜெயசூர்யா ஆகியோரும் உரை நிகழ்த்தினார்கள்.

Breathe A Little Better என்னும் முனைவர் சுந்தர் பாலசுப்ரமணியன் அவர்களின் நூல் வெளியீடு செய்து வைக்கப்பட்டது. இணை அமர்வுகளும் நிகழ்ந்தன.

தனிநாயக அடிகள் அரங்கில்:

அரசியல் (தமிழ்) பற்றிய ஆய்வு, முனைவர் உதயன் துரைராசா தலைமைய-ில் நிகழ்ந்தேறியது. இதில், திரு. க. சண்முகலிங்கம், வள்ளுவர் அரசுக் கோட்பாடு: பொருட்பாலின் ஐந்து அதிகாரங்கள் கொண்ட ஆய்வு, திரு. சிவ-பாலு தங்கராசா, வள்ளுவர் காட்டும் அரசியல் கோட்பாடுகளும் கனடா அரசியல் அமைப்பும்.

திரு. சுகந்தன் வல்லிபுரம், திருக்குறள் கூறும் ஒற்றாடல் - தொல்காப்பியர் காலம் முதல் இன்றுவரை; திருமதி. சசிகலா ஜீவாந்தன், திருவள்ளுவரின் பார்வையில் நாடு; பேராசிரியர் மா. சின்னத்தம்பி, திருக்குறளில் கல்வி, சுயமேலாண்மையின் பங்களிப்புப் பற்றிய பார்வை. எனும் தலைப்புகளில் உரைகள் நிகழ்ந்தன.

க.பொ, இரத்தினம் அரங்கில் ஒப்பாய்வு மதம் எனும் தலைப்பில், முனைவர் செய்வநாயகி சிறிதாஸ் தலைமை-மயில், திரு. அரியராஜா முத்தையா, திருக்குறளும் தம்மபதமும்; திரு. கனி விமலநாதன், திருக்குறளும் ஆசீவகமும்; திருமதி. கலாதேவி அரியராஜா, திருக்குறளும் ஆசிவகமும்; முனைவர் புட்பா கிறிட்டி, திருக்குறளும் விவிலியமும்; திரு. கஜரூபன் குகதாசன், திருக்குறளும் பௌத்தமும்; எனும் தலைப்புகளில் உரைகள் வழங்கினர்.

ஆறுமுகநாவலர் அரங்கில், ஒப்பாய்வு (இலக்கியம்) முனைவர். இ. பாலசுந்தரம் தலைமையில் நிகழ்ந்தது. கலாநிதி மைதிலி தயாநிதி, ஜி.யு. போப்பினதும், வி.ஆர். இராமசந்திர தீட்சிதரினதும் குறள் மொழிபெயர்ப்புகள் பொருட்பாலை மையப்படுத்திய ஓர் ஒப்பீடு திரு. அகணி சுரேஸ் திருக்குறளிலும் பதினெண்கீழ் கணக்கு நூல்களிலும் நட்பு பற்றிய கருத்துக்களும், உளவியல் சிந்தனைகளம் திரு. இராச்குமார் குணரட்ணம் போரும் மதிநுட்பமும் - திருவள்ளுவரின் போர் ஒழுக்கமும், சீன அறிஞரான சன் சூவின் போர்க்கலையும்; திருமதி. லாவண்யா தினேஷ்குமார் திருக்குறளும் ஏனைய தமிழ் நீதி நூல்களும்; மருத்துவர் வரதா கந்தசாமி பொருளியல் சிந்தனையில் வள்ளுவரும் ஆடம் சிமித்தும்: ஒப்பாய்வு எனும் தலைப்புக்களில் உரை நிகழ்த்தினர்.

கலை நிகழ்ச்சிகள் மாலை 6.30 மணி முதல் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. நடனம் "குறளின் அசைவு" திருமதி. நிரோதினி பரராஜசிங்கம் மாணவிகள் சிறப்புப் பேச்சு: பேரா. பர்வீன் சுல்தானா, இயக்குனர், உலகத் தமிழ்ச் சங்கம், மதுரை; இவரது உரை வழமைபோல பார்வையாளர்களை வசப்படுத்திய ஒரு உற்சாகமான உரையாக அமைந்திருந்தது.

அதனைத் தொடர்ந்து இசை நிகழ்ச்சி குறளின் குரல் - இசையமைப்பாளர் பரத்வாஜ் அவரகளின் ஏற்பாட்டில் கனடா மெகா ரியுனர்ஸ் இசைக்குழு அதன் தலைவர் அரவிந்தன் மகேசன் அவர்களது குழுவினர் இசையில் நடைபெற்றது. தொடர்ந்து கௌரவிப்பு இடம்பெற்றது. இவ்வாறான அனைத்துலக திருக்குறள் மாநாட்டு முதல்நலாள் நிகழ்ச்சிகள் இனிய நிறைவுற்றன.

நிகழ்ச்சிகளை திருமதி. ஜோதி ஜெயக்குமார் தொகுத்து வழங்கினார். இரவு 9.00 மணிக்கு முதலாம் நிகழ்ச்சிகள் இனிதே நிறைவு பெற்றன.































இலங்கை செய்திகள்
Sri Lanka News

# யாழ்ப்பாணம் – மல்லாகம் நீதவான் நீதிமன்ற மேலதிக நீதவான்சுபறாஜினி ஜெகநாதன் பதவி நீக்கம் செ ய்யப்பட்டார்!

பு. கஜிந்தன்

மல்லாகம் நீதிவான் நீதிமன்ற மேலதிக நீதிவான் இன்றையதினம் பதவியில் இருந்து நீக்கப்பட்டதாக மல்லாகம் நீதிமன்ற சட்டத்தரணிகள் சங்கத்தின் செயலாளர் என்.பார்த்தீபன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், மல்லாகம் நீதவான் நீதிமன்ற மேலதிக நீதிவான் சுபறாஜினி ஜெகநாதனுக்கெதிராக மல்லாகம் நீதிச்சேவை ஆணைக்குழுவில் சட்டத்தரணிகள் சங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாடு தொர்பான விசாரணை சமீப காலமாக நடைபெற்று வந்திருந்தது.

இந்த நிலையில் கடந்த 23.09.2025 அன்று நீதிச்சேவை ஆணைக்குழுவில் இடம்பெற்ற விசாரணையின் பின்னர் குறித்த நீதிவான் அவர்கள் நீதிவான் ஒருவருக்குரிய கண்ணியமான நடத்தையை வெளிப்படுத்தியிருக்காத குற்றச்சாட்டுக்கு ஏதுவான சான்றுகள் முற்படுத்தப்பட்டிருந்தமையைத் தொடர்ந்து குறித்த நீதவான் அவர்கள் தனது பதவி விலகல் கடிதத்தினை உடனடியாக நீதிச்சேவை ஆணைக்குழுவிடம் கையளித்ததன் அடிப்படையில் குறித்த நீதவான் அவர்கள் நீதிச்சேவை ஆணைக்குழுவினால் 23.09.2025 இலிருந்து பதவி நீக்கம் செய்யப்பட்டார்.

மேலும், 24ம் திகதி புதன்கிழமை அன்றைய தினம் நீதிச்சேவை ஆணைக்குழுவின் சார்பில் மேல்நீதிமன்ற நீதிபதி ஒருவர் மல்லாகம் நீதிமன்றத்திற்கு காலை வேளை பிரசன்னமாகி பதவி நீக்கம் செய்யப்பட்ட நீதவானின் சமாதான அறை மற்றும் அதில் உள்ள பொருட்களை பொறுப்பேற்று நீதிமன்ற பதிவாளரிடம் கையளித்திருந்தார்.

அதனைத்தொடர்ந்து சட்டத்தரணிகளுடன் கலந்துரையாடிய கௌரவ மேல் நீதிமன்ற நீதிபதி அவர்கள் புதிய நீதவான் ஒருவர் வெகுவிரைவில் நியமிக்கப்படுவார் என சட்டத்தரணிகளுக்கு உத்தரவாதம் வழங்கியிருந்தார் - என குறிப்பிட்டுள்ளார்.

# சாவகச்சேரியில் இடம்பெற்ற கோர விபத்தில் இருபது வயதுடைய இளைஞன் பலி!



25-09-2025 வியாழக்கிழமை அன்றையதினம் ஜசாவகச்சேரி - நுணாவில் ஏ-9 வீதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் பெண்ணொருவர் படுகாயமடைந்துள்ளார்.

சாவகச்சேரியில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி பயணித்த டிப்பரை, அதே திசையில் மோட்டார் சைக்கிளில் சென்ற பெண் முந்திச் செல்ல முற்பட்டபோது எதிர் திசையாக யாழ்ப்பாணத்தில் இருந்து சாவகச்சேரி நோக்கி பயணித்த இளைஞர் செலுத்திய மோட்டார் சைக்கிளுடன் நேருக்கு நேர் மோதி விபத்து சம்பவித்துள்ளது.

இதனால் குறித்த இளைஞன் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். படுகாயமடைந்த பெண் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சேர்ப்பிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

மீசாலை வடக்கு, புத்தூர் சந்தி பகுதியைச் சேர்ந்த தி.யதுஸ் (வயது 20) என்ற இளைஞனே இந்த விபத்தில் உயிரிழந்தார். விபத்து சம்பவம் தொடர்பான விசாரணைகளை சாவகச்சேரி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# இலங்கை தமிழரசு கட்சியின் வட்டுக்கோட்டை கிளையின் ஏற்பாட்டில் தியாக தீபத்தின் நினைவேந்தல்!



தியாக தீபம் திலீபனின் நினைவேந்தல் 25-09-2025 வியாழக்கிழமை அன்றையதினம் அராலி செந்தமிழ் சனசமூக நிலையத்தில் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

இலங்கை தமிழரசு கட்சி வட்டுக்கோட்டை கிளையின் ஏற்பாட்டில் இந்த நினைவேந்தல் நிகழ்வு முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது ஈகைச்சுடர் ஏற்றப்பட்டு, தியாக தீபத்தின் திருவுருவப் படத்திற்கு மலர்மாலை அணிவித்து, மலர்தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து நினைவுப் பேருரைகள் ஆற்றப்பட்டன. இறுதியாக நினைவேந்தலில் கலந்துகொண்ட அனைவருக்கும் மரக்கன்றுகள் வழங்கி வைக்கப்பட்டன.

வலி. மேற்கு பிரதேச சபையின் தவிசாளர் சண்முகநாதன் ஜயந்தன், உப தவிசாளர் க.இலங்கேஷ்வரன், வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் சுகிர்தன், வலி. மேற்கு பிரதே சபையின் உறுப்பினர்கள், மாவீரர்களின் பெற்றோர் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் இந்த நினைவேந்தலில் கலந்துகொண்டனர்.



இலங்கை செய்திகள் Sri Lanka News

# கிளிநொச்சியில் இடம்பெற்ற சமாதானத்திற்கான நடைப்பவனி!

செல்வநாயகம் நினைவு அறக்கட்டளையின் அனுசரணையில், வடமாகாணத்தில் தெரிவு செய்யப்பட்ட 30 இளைஞர்களுக்கு சமாதானம் தொடர்பாக பயிற்சி வழங்கப்பட்ட நிலையில் உலக சமாதான தினத்தை முன்னிட்டு நடைபவனி ஒன்று அவர்களால் திட்டமிடப்பட்டது.





குறித்த நடைபவனியானது உலக சமாதான தினத்தை முன்னிட்டு 20ம் திகதி அன்றையதினம் காலை 9.00 மணியளவில் கிளிநொச்சி கரடிப்போக்கு சந்தியில் ஆரம்பமாகி கிளிநொச்சி பேருந்து நிலையம் வரை சென்றது.




தமிழ், சிங்கள மற்றும் முஸ்லிம் இளைஞர்கள், சமாதானத்தை வலியுறுத்திய வாசகங்கள் பொறிக்கப்பட்ட பதாகைகளை ஏந்தியவண்ணம் நடப்பயணத்தில் ஈடுபட்டனர்.

இவ் நடப்பயணத்தில் நூற்றுக்கணக்கான இளைஞர்கள், மத குருமார்கள், சமூக செயற்பாட்டாளர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.





# அளவெட்டி அருணோதயாக் கல்லூரியில் சிறப்பாக இடம் பெற்ற மனைப் பொருளியல் கண்காட்சி

அளவெட்டி அருணோதயாக் கல்லூரியில் 19ம் திகதி வெள்ளிக்கிழமை அன்றயைதினம் மனைப் பொருளில் கண்காட்சி சிறப்பாக இடம் பெற்றது. கல்லூரி முதல்வர் ஜெயானந்தன் தலைமையில் இடம்பெற்ற இவ்விழாவில் மாணவர்களின் கற்பனைத்திறன் கொண்ட ஆக்கங்கள் பலவும் காட்சிப்படுத்தப் பட்டிருந்தன.



இவ்விழாவில் மாணவரின் பாரம்பரிய உணவுத் தயாரிப்புக்கள் பலரையும் கவர்ந்தன.

இங்கு பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழகத்தின் மனைப் பொருளியல் அலகின் தலைவர் திருமதி. மேனகா சிவகரனும், சிறப்பு விருந்தினர்களாக வலிகாமம் கல்வி வலய தொழில்நுட்ப பாட ஆசிரிய ஆலோசகர் அருந்தவம் மற்றும் மனைப்பொருளியல் அலகின் விரிவுரையாளர்களான முகம்மது சாரிப், டிலக்ஷிகா ஜெயக்குமார் ஆகியோரும் கலந்து சிறப்பித்திருந்தனர்.

# யாழ்ப்பாணம் – மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக் கழகம் நடத்திய 2025ஆம் ஆண்டுக்கான கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டி இறுதி போட்டி



யாழ்ப்பாணம் - மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக் கழகம் நடாத்தும் 2025ஆம் ஆண்டுக்கான மாபெரும் கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டியின் இறுதி போட்டி 21ம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை மோகனதாஸ் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

சென்ற வாரம் ஆரம்பமான கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டியில் A பிரிவில் 7 கழகங்கள் பங்குபற்றி போட்டியிட்டு இருந்தன.

இறுதி போட்டிக்கு ஆவரங்கால் இந்து இளைஞர் அணியை எதிர்த்து கெரடாவில் ஐக்கிய விளையாட்டுக்கழகம் பலப்பரிட்சை நடத்தியிருந்தது.

நான்கு சுற்றுக்களும் விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழகம் மூன்று சுற்றுக்களில் வெற்றிபெற்று கிண்ணத்தை தனதாக்கிக்கொண்டது.

அத்துடன் B பிரிவில் நடைபெற்ற போட்டியில் 20க்கு மேற்பட்ட அணிகள் பங்குபற்றி இறுதிப்போட்டிக்கு அச்சுவேலி கலைமகள் அணியை எதிரத்து நாயன்மார்கட்டு பாரதி அணி பலப்பரிட்சை நடத்தியிருந்தது.

மூன்று சுற்றுக்களிலும் விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில் அச்சுவேலி கலைமகள் விளையாட்டுக்கழகம் மூன்று சுற்றுக்களில் வெற்றிபெற்று கிண்ணத்தை தனதாக்கிக்கொண்டது.

இப்போட்டியில் A பிரவில் ஆட்டநாயகனாக இந்து இளைஞர் அணியின் வீரர் சன்சயன் மற்றும் B பிரிவல் அச்சுவேலி கலைமகள் அணயின் சன்யெய் தெரிவுசெய்யப்பட்டிருந்தனர்.

இப்போட்டிக்கு பிரதம விருந்தனராக யாழ். பல்கலைக்கழக உடற்கல்வி விரிவுரையாளர் மாணிக்கவாசகர் இளம்பிறை கலந்துகொண்டு வெற்றிக்கிண்ணத்தை வழங்கியிருந்தார்.

மோகனதாஸ் விளையாட்டு கழக நிர்வாகத்தினர்கள், கழக உறுப்பினர்கள், விளையாட்டு வீரர்கள், பிரதேச மக்கள், நலன் விரும்பிகள், கரப்பந்தாட்ட ரசிகர்கள் என அனைவருனதும் ஒத்துளைப்பில் கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டியானது சிறப்பாக நடைபெற்றது.

# தியாக தீபம் திலீபனின் ஆவணக் காட்சியகத்தை பார்வையிட்ட தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்ரஜீவன்!

நல்லூரில் தியாக தீபம் திலீபனின் ஆவணக் காட்சியகம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.




இவ்வாறு திறந்து வைக்கப்பட்ட ஆவணக் காட்சியகத்திற்கு 20ம் திகதி சனிக்கிழமை அன்று வருகை தந்த தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரஜீவன் ஜெயசந்திரமூர்த்தி ஆவணக் காப்பகத்தை பார்வையிட்டார்.



பின்னர் தியாக தீபம் திலீபனின் திருவுருவச் சிலைக்கு அஞ்சலியும் செலுத்தினரார்.


Tamilthakaval.org

ஒரு இலவச சேவை -- A Free Service



இணையத்தளம்: www.tamilthakaval.org

இவ் இணையத்தளம் உலகெங்கும் பரந்து வாழும் ஈழத்தமிழ் மக்கள் தங்களுடைய உற்றார், உறவினர்களின் பிரிவுத் துயரச்செய்திகள், நினைவஞ்சலிகள் முதலியவற்றை எப்பொழுதும் ஏவ்வித சந்தாவுமின்றி இலவசமாகப் பிரசுரித்து அறிவித்தல் தரும் நோக்கத்தில் தாபிக்கப்பட்ட தொன்றாகும்.

மேலும் பல்வேறு முக்கிய செய்திகளைக்கூட பகிர்ந்து கொள்ளும் வசதிகளும் இதில் தரப்பட்டுள்ளன.

செய்திகளைப் பிரசுரிப்பதற்கான விண்ணப்ப படிவமும், நிரப்புவதற்கான விதிமுறைகளும் விவரமாக இணையத்தளத்தில் இணைக்கப்பட்டுள்ளன.

உங்கள் வசதிக்கமைய செய்திகளை "info@tamilthakaval.org" என்ற மின்னஞ்சல் முகவரிக்கும் அனுப்பிவைக்கலாம்.

மேலதிக தகவல்களுக்கு 1-866-300-1765 என்ற தொலைபேசி இலக்கத்தில் எம்முடன் தொடர்பு கொள்ளலாம்.

மேலும் விவரங்களுக்கு இணையத்தளம் tamilthakaval.org பார்வையிடவும்.

இந்த இணையத்தளத்தை சில தொண்டர்கள் ஒரு சமூக சேவையாக கருதி பொறுப்புடன் நன்கு நடாத்தி வருகின்றார்கள்.

இவர்கள் இப்பணியை வெற்றிகரமாக தொடருவதற்கு ஈழத்தமிழர்களாகிய உங்களின் ஆதரவு மிகவும் இன்றியமையாதது.

உங்களால் இயன்றவரை செய்திகளை உடனுக்குடன் தெரிவித்து இந்த இணையத்தளத்தில் பிரசுரிப்பதற்கு உதவி செய்து இச்சமூக சேவையை மேன்மேலும் மேன்மைபடுத்த உதவுமாறு உங்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.




# வடமராட்சி கிழக்கு தாளையடி கடற்கரைக்கு வருபவர்கள் அவதானம் — விடுக்கப்பட்ட எச்சரிக்கை!

வடமராட்சி கிழக்கு தாளையடி கடற்பகுதிக்கு வரும் சுற்றுலாவாசிகள் கடலுக்குள் இறங்க வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

வடமராட்சி கிழக்கு தாளையடி கடற்கரை பகுதிக்கு அதிகளவான சுற்றுலாவாசிகள் நாளாந்தம் வருகை தந்து பொழுதை கழிப்பதுடன், அதில் பலர் கடல் விளையாட்டுக்களிலும் ஈடுபடுகின்றார்கள்.

தற்போது வடமராட்சி கிழக்கு கடற்பகுதிகளில் அதிகளவான காற்று வீசுவதால் கடல் கொந்தளிப்பான நிலையில் காணப்படுகிறது.

ஆகவே தாளையடி கடற்கரைக்கு வரும் சுற்றுலாவாசிகளின் பாதுகாப்பை கருத்தில் கொண்டு யாரும் கடற்கரைக்குள் இறங்க வேண்டாம் என அப்பகுதி மீனவர்களால் அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

சில நாட்களுக்கு முன்பு தாளையடி கடற்கரைக்கு வருகை தந்த சுற்றுலாவாசி ஒருவர் கடலில் நீராடும் போது உயிரிழந்தமை அடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.



# யாழ்ப்பாணம் — உடுவில் பகுதியில் மின்சாரம் தாக்கியதில் இளைஞர் உயிரிழப்பு!

24ம் திகதி புதன்கிழமை அன்றையதினம் யாழ்ப்பாணம் - உடுவில் பகுதியில் இளைஞன் ஒருவர் மின்சாரம் தாக்கியதில் உயிரிழந்துள்ளார். மாதா கோவில் வீதி, உடுவில், சுன்னாகம் பகுதியைச் சேர்ந்த விஷ்ணுராஜ் யதுர்மன் (வயது 21) என்ற இளைஞரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இது குறித்து மேலும் தெரியவருகையில், குறித்த இளைஞன் இன்று காலை ஆடைகளை மின்சார சாதனம் மூலம் அழுத்திக் கொண்டிருந்த நிலையில் மின் இணைப்பில் இருந்த கோளாறு காரணமாக மின்சாரம் அவர் மீது தாக்கியதில் அவர் உயிரிழந்துள்ளார்.

பின்னர் அவரது சடலம் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டது. சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டாடர். சாட்சிகளை சுன்னாகம் பொலிஸார் நெறிப்படுத்தினர்.

# யாழ்ப்பாணம் மூளாய் சைவப் பிரகாச வித்தியாலயத்தில் திண்மக் கழிவகற்றல் தொகுதி திறந்துவைப்பு!







யாழ்ப்பாணம் மூளாய் சைவப் பிரகாச வித்தியாலயத்தில் 25ம் திகதி அன்றையதினம் வியாழக்கிழமை திண்மக் கழிவகற்றல் தொகுதி திறந்து வைக்கப்பட்டது.

இதன்போது விருந்தினர்களுக்கு மலர்மாலை அணிவிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து தலைமையுரை, விருந்தினர்களின் உரைகள் இடம்பெற்றன. தொடர்ந்து, திண்மக் கழிவகற்றல் தொகுதியானது திறந்து வைக்கப்பட்டது.

பாடசாலையின் அதிபர் பா.பாலசுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்ற இந்த திறப்பு விழாவில், பிரதம விருந்தினராக வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் தவிசாளர் சண்முகநாதன் ஜயந்தனும், சிறப்பு விருந்தினர்களாக பழைய மாணவர் ஜெ.ஜெயச்சந்திரனும், எழுக மூளாய் மறுமலர்ச்சி மையத்தின் பிரதிநிதி ப.புருசோத்தமனும் கலந்து சிறப்பித்துடன், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பழைய மாணவர்களும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

இந்த திண்மக் கழிவகற்றல் தொகுதியை திறந்து வைப்பதற்கு எழுக மூளாய் மறுமலர்ச்சி மன்றம் நிதி அனுசரணை வழங்கியமை குறிப்பிடத்தக்கது.


Thana Insurance Inc

T20 INSURANCE

| AGE | | 25 | | 30 | | 35 | | 40 | | 45 | | 50 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 200K | T20 | 17 | 15 | 18 | 15 | 20 | 17 | 27 | 21 | 43 | 30 | 69 | 49 |
| 500K | T20 | 30 | 22 | 31 | 22 | 32 | 24 | 46 | 35 | 73 | 54 | 126 | 85 |
| 1MILL | T20 | 54 | 36 | 55 | 38 | 56 | 42 | 86 | 62 | 139 | 100 | 244 | 164 |

PERMANENT LIFE INSURANCE (PREMIUM NEVER INCREASE)

| AGE | | 25 | | 30 | | 35 | | 40 | | 45 | | 50 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 200K | WL | 82 | 71 | 100 | 86 | 123 | 106 | 152 | 131 | 197 | 166 | 238 | 209 |
| 500K | WL | 192 | 164 | 232 | 202 | 295 | 251 | 368 | 316 | 480 | 407 | 587 | 513 |

NON MEDICAL INSURANCE (PREMIUM NEVER INCREASE)

| AGE | | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | | 70 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 25K | WL | 38 | 34 | 47 | 40 | 55 | 49 | 76 | 75 | 106 | 84 | 148 | 105 |
| 50K | WL | 69 | 62 | 89 | 75 | 104 | 93 | 147 | 123 | 206 | 162 | 290 | 205 |
| 100K | WL | 133 | 118 | 172 | 144 | 202 | 179 | 289 | 241 | 406 | 319 | 475 | 405 |

20 YEARS TERM - NON MEDICAL INSURANCE

| AGE | | 40 | | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 100K | T20 | 20 | 17 | 28 | 22 | 41 | 34 | 78 | 57 | 131 | 88 | 233 | 157 |
| 200K | T20 | 33 | 30 | 50 | 38 | 78 | 63 | 150 | 108 | 257 | 171 | 460 | 307 |

Thana Manickavasagar
Insurance Broker



THANA INSURANCE Inc.

Web : www.thana.ca
E-mail : thana7@gmail.com
Address : 80 Nashdene Road , unit D218, Scarborough, ON,M1V 5E4

Cell : 416-728-5772
Office : 416-519-3896

"WE DO 100% ONLINE SERVICES,24/7."



# திலீபனின் நினைவு நாள் சிந்தனைகள்

**- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார் -**

**நா**ட்டில் திலீபனின் நினைவு நாட்களை உரிமை கோரவோ அல்லது நினைவுத் தூபிக்கு யார் வரவேண்டும் வரக்கூடாது என்று தடுப்பதற்கோ ஆட்கள் உண்டு. ஆனால் திலீபனைப்போல உணவின்றி நீரின்றி உண்ணாவிரதம் இருப்பதற்கு எத்தனை பேர் உண்டு? அப்படி ஒரு கொஞ்சம் பேர் இருந்திருந்தாலே கடந்த 16 ஆண்டுகளில் தமிழ் அரசியல் இவ்வளவு மோசமாகத் தேங்கி நிற்கும் ஒரு நிலைமை வந்திருக்காது.

இந்திய அமைதி காக்கும் படை வெளியேறிய பின், 1990 ஆம் ஆண்டு மூத்த நாடகவியலாளரும் தமிழரசுக் கட்சியின் செயற்பாட்டாளரும் ஆகிய அரசையாவோடு ஒரு நாள் கதைத்துக் கொண்டிருந்தேன். அரசையா யார் என்றால் 1956 ஆம் ஆண்டு நடந்த சத்யாகிரக போராட்டத்தில் ஈடுபட்டவர். அவரிடம் நான் கேட்டேன் “இப்போது நடந்து கொண்டிருக்கும் இந்த போராட்டம் தொடர்பாக ஒரு சத்தியாகிரகியாக உங்களுடைய பார்வை என்ன?” என்று. அவர் சொன்னார், “அந்நாட்களில் நாங்கள் சத்தியாகிரகம் செய்தோம். ஆனால் யாருமே சாகத் தயாராக இருக்கவில்லை. நாங்கள் சத்யாக்கிரகம் என்பதனை சாகாமல் போராடும் ஒரு வழிமுறையாகதான் பார்த்தோம். ஆனால் திலீபன் அதனை சாகும் வரையிலுமான ஒரு போராட்டமாகப் போராடிக் காட்டியிருக்கிறார். திலீபனைப் போல 500 பேர் அப்பொழுது எங்களிடம் இருந்திருந்தால் நாங்கள் அப்பொழுதே போராடி முடித்திருப்போம். ஒரு இளைய தலைமுறை ஆயுதம் ஏந்தும் நிலைமை வந்திருக்காது” என்று.

திலீபனுக்கு முன்பு மட்டுமல்ல திலீபனுக்குப் பின்பும் அதாவது 2009க்கு பின்பும் நிலைமை அதுதான். திலீபனைப்போல தியாகம் செய்ய யார் தயாராக இருக்கிறார்கள் என்பது உயிரைக் கொடுக்க வேண்டும் என்ற பொருளில் அல்ல. தமது இலட்சியத்துக்காக கடைசிவரை விட்டுக் கொடுப்பில்லாமல் அர்ப்பணிப்போடு போராடுவதற்காக எத்தனை பேர் தயார்?

கடந்த 16 ஆண்டுகளிலும் குறிப்பிட்ட சிலர் அவ்வாறு போராடி இருக்கிறார்கள். வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுடைய முதிய பெற்றோர் போராடி இருக்கிறார்கள். அரசியல் கைதிகள் சிறைகளில் போராடி இருக்கிறார்கள். லண்டனில் ஒரு பெண் போராடினார். இப்படி ஆங்காங்கே போராட்டங்கள் நடந்திருக்கின்றன. ஆனால் இந்த உண்ணாவிரதிகளில் யாரும் இறக்கவில்லை.

அவர்களை இறக்க விடவும் முடியாது. குறிப்பாக அரசியல் கைதிகளின் போராட்டத்தில் கைதிகளே கைதிகளுக்காகப் போராட வேண்டியிருப்பது என்பது ஒரு வகையில் தமிழரசியலின் சீரழிந்த போக்குத்தான். அதுபோலவே தங்கள் பிள்ளைகளை அல்லது கணவன்மார்களை காணாமல் போகக் கொடுத்த முதிய பெற்றோரே சாகும்வரை உண்ணாவிரதம் இருக்க வேண்டியிருப்பது என்பது தமிழரசியலின் இயலாதத்தனம்தான். இந்த இயலாதனம் இப்பொழுதும் உண்டு. இந்த இயலாத்தனத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்றவர்கள்தான் திலீபனை யார் தத்தெடுப்பது? அவருக்கு அஞ்சலி செலுத்த யாருக்கு உரிமை அதிகம்? என்று கேட்டு மோதிக் கொண்டிருக்கிறார்கள்.

கடந்த சில ஆண்டுகளாக குறிப்பாக மணிவண்ணன் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்குள் இருந்து விலகிய பின் அந்தக் கட்சிக்குள் ஏற்பட்ட அந்த மோதலானது திலீபனின் நினைவு நாட்களிலும் பிரதிபலிப்புகளை ஏற்படுத்தி வருகிறது. இந்த முறையும் அப்படித்தான். கட்சியை விட்டு நீக்கப்பட்ட பின் மணிவண்ணன் திலீபனின் நினைவுத் தூபிக்கு முன்னால் உள்ள ஒரு சிறிய வளவில் திலீபனின் நினைவுகள் அடங்கிய ஆவணக் காட்சியகம் ஒன்றை உருவாக்கி வருகிறார்.

அந்த ஆவணக் காட்சிக்கு ஒரு முக்கியத்துவம் உண்டு. அது திலீபனின் வாழ்க்கை வரலாற்றை அடுத்தடுத்த தலைமுறைகளுக்கு நினைவூட்ட உதவும். நினைவுகளை தலைமுறைகள் தோறும் கடத்த உதவும் என்ற ஒரு முக்கியத்துவம் உண்டு. அதைவிட திலீபனின் நினைவுகளை மக்கள் மயப்படுத்தவும் அது உதவும்.

ஆனால் இம்முறை அந்த வளவை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியைச் சேர்ந்தவர்கள் முன்கூட்டியே திட்டமிட்டு யாழ் மாநகர சபையிடம் பதிவு செய்து விட்டதாக ஒரு தகவல் வந்தது. அது மணிவண்ணன் அணியின் ஆவணக் காப்பகத்தை அங்கே அமைப்பதைத் தடுக்கும் நோக்கிலானது என்று மணிவண்ணன் தரப்பு குற்றம் சாட்டியது. விவகாரம் ஊடகச் சந்திப்புகளை நடத்தி மோதும் ஒரு நிலைமைவரை போனது. எனினும் பின்னர் அது தீர்க்கப்பட்டு விட்டது. முடிவில் மணிவண்ணன் அணியினர் அங்கே ஆவணக் காட்சியகத்தை நிறுவினார்கள். அங்கு சுமந்திரன் வந்திருந்தார். பார்வையாளர் பதிவேட்டில் தனது குறிப்பையும் எழுதி விட்டுச் சென்றிருந்தார்.

அங்கே திலீபனின் மார்பளவு சிலை வைக்கப்பட்டிருக்கிறது. அந்த சிலை திலீபனைப் போல தத்ரூபமாக இல்லை. அந்தச் சிலை மட்டுமல்ல தமிழ்ப் பகுதிகளில் அவ்வாறு உருவாக்கப்படுகின்ற பல உருவச் சிலைகள் குறிப்பிட்ட நபரின் தோற்றத்தை தத்ரூபமாகப் பிரதிபலிக்கவில்லை என்ற குற்றச்சாட்டுக்கள் விமர்சனங்கள் உண்டு. மனிதர்களின் சிலைகளை மட்டுமல்ல, தியாகிகளின் சிலைகளை மட்டுமல்ல, கடவுளர்களின் சிலைகளைக்கூட ஒழுங்காக அளவுப் பிரமாணத்தோடு உருவாக்கத்தக்க சிற்பிகள் நாட்டில் மிகக் குறைவாகவே உண்டு. அதனால் தமிழ்ப் பகுதிகளில் நிறுவப்படும் பெரும்பாலான சிற்பங்கள் தொடர்பாக விமர்சனங்கள் உண்டு. ஏற்கனவே அது பற்றி நான் எழுதியுள்ளேன்.

நல்லூரில் திலீபனின் மார்பளவு சிலை தொடர்பாகவும் முகநூலில் விமர்சனங்கள் வந்தன. அந்த விமர்சனத்தில் ஒரு தமிழ் தேசிய மக்கள் முன்னணி உறுப்பினர் எழுதுகிறார்... சுமந்திரன் சொன்னபடியால்தான் அந்தச் சிலை அவ்வாறு வேறு யாரையோ போல உருவாக்கப்பட்டிருக்கிறது என்ற பொருள்பட. சிலைக்குள் அரசியல் இருக்கும். ஆனால் சிலையின் கலைத்துவம் பிழைத்தமைக்குள் அரசியல் இருக்குமா? எப்படியெல்லாம் விபரீதமாகச் சிந்திக்கிறார்கள்? இதற்கு எந்த மருத்துவத்திலாவது மருந்து உண்டா?

நினைவு நாட்களும் நினைவுகளும் தியாகிகளும் தியாகிகளின் சிலைகளும் கட்சிச் சண்டைகளுக்குள் சிக்கும் ஒரு நிலை. இப்படி நினைவு நாட்களை வைத்து ஆளுக்கு ஆள் மோதிக் கொள்ளும் கட்சிகள் அல்லது நினைவுகளுக்கு உரிமை கொண்டாடும் கட்சிகள் அல்லது யார் அந்த நினைவுகளை வைத்து வெற்றிகரமாக கட்சி அரசியலை முன்னெடுக்கலாம் என்று போட்டி போடும் கட்சிகளைக் கொண்ட அரசியல் சூழலில், இக்கட்டுரையில் தொடக்கத்தில் அரசையா கூறியதுபோல திலீபனைப்போல தியாகம் செய்ய எத்தனை பேர் உண்டு?

இம்முறை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி வழமை போல வாகன ஊர்தியை எடுத்துக்கொண்டு வடக்கு கிழக்காகப் பயணம் செய்தது. அதுபோலவே ஆங்காங்கே கட்சி சார்ந்தவர்களும் கட்சி சாராதவர்களும் குருதிக்கொடை முகாம்களை, மருத்துவ முகாம்களை ஒழுங்குபடுத்தியிருந்தார்கள். திலீபனின் நினைவுத் தூபிக்கு முன்பாக ஓவியப் போட்டி ஒன்று நடத்தப்பட்டது. முல்லைத் தீவில் ஒரு ஞாபகார்த்த உதைப்பந்தாட்டப் போட்டி ஒழுங்கமைக்கப்பட்டது. இவை யாவும் நல்ல விடயங்கள். திலீபனை மட்டுமல்ல தமிழ் மக்களுக்காக தியாகம் செய்தவர்களின் நினைவுகளைக் காவவும் கடத்தவும் பரவலாக்கவும் இதுபோன்ற நடவடிக்கைகள் அவசியம்.

ஆனால் அதனை கட்சி அரசியலுக்குள் பங்கு போடாமல் கட்சி கடந்த ஓர் அரசியலாக முன்னெடுக்க வேண்டும். ஏற்கனவே கடந்த 16 ஆண்டுகளுக்கும் மேலாக ஒரு பொதுவான நினைவு கூர்தலுக்கான ஏற்பாட்டுக் குழுவை உருவாக்க முடியவில்லை. தமிழ் மக்களின் விடுதலைக்காகப் போராடிய ஒவ்வொரு இயக்கமும் தனக்கு தனக்கென்று தனித்தனியாக நினைவு நாட்களை வைத்திருக்கிறது. நினைவு நாட்களை ஒன்றாக்க முடியவில்லை. அல்லது தமிழ் மக்களின் விடுதலைக்காகப் போராடிய எல்லாருக்குமான ஒரு பொது நினைவு நாளைக் கண்டுபிடிக்க முடியவில்லை.

இப்படிப்பட்டதோர் பின்னணிக்குள் ஒரு இயக்கத்தின் நினைவு நாட்களை அனுஷ்டிக்கும் விடயத்திலேயே கட்சிகள் அல்லது அரசியல் செயற்பாட்டாளர்கள் போட்டி போடும் ஒரு நிலைமை அண்மை ஆண்டுகளாக அதிகரித்து வருகிறது. இப்படிப்பட்ட மோதல்களின் விளைவாகத்தான் கடந்த நாடாளுமன்ற தேர்தலில் தமிழ் மக்கள் மத்தியில் தேசிய மக்கள் சக்தியானது ஏழு ஆசனங்களை பெற்றது. அதை தமிழ் மக்கள் தனக்கு வழங்கிய ஆணையாக அரசாங்கம் ஐநாவில் வைத்துக் கூறுகிறது. சுவிற்சலாந்தில் நடைபெற்ற அனைத்துக் கட்சிகளின் கூட்டத்திலும் அதனை ஓர் அடைவாகக் கூறியிருக்கிறது. எனவே தமிழ்க் கட்சிகள் தியாகிகளின் நினைவுகளுக்கு உண்மையாக இருக்க வேண்டும். அரசையா கூறியதுபோல உண்மையாகத் தியாகம் செய்யத் தயாராக இருக்க வேண்டும். தியாகிகளை நினைவு கூர்வது என்பது அந்தத் தியாகத்துக்கு உண்மையாக இருப்பது. அந்தத் தியாகி போல வாழ்வது. அப்படி வாழும் தலைவர்கள், தொண்டர்களின் தொகை அதிகரித்தால்தான் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் கடந்த பொதுத் தேர்தலில் பெற்ற வெற்றியைத் தற்செயலானது என்று நிரூபிக்கலாம்.

---



இலங்கை செய்திகள் Sri Lanka News

மன்னார் நிருபர்

# மன்னார் வளைகுடா கடல் பகுதியில் அரிய வகை கடல் வாழ் உயிரினம் இறந்த நிலையில் கரை ஒதுங்கியது





**- எஸ்.ஆர்.லெம்பேட் (20-09-2025)**

திருப்புல்லாணி அடுத்துள்ள சேதுக்கரை தெற்கு மன்னார் வளைகுடா கடற்கரை பகுதியில் 19ம் திகதி வெள்ளிக்கிழமை இறந்த நிலையில் கரை ஒதுங்கிய எட்டு வயது மதிக்கத்தக்க கடல் பசுவை கால்நடை மருத்துவர்கள் பிரேத பரிசோதனை செய்து பின் வனத்துறையினர் கடற்கரை மணலில் புதைத்துள்ளனர்.

மன்னார் வளைகுடா கடல் பகுதியில் அரிய வகை கடல் வாழ் உயிரினங்களான கடல் பல்லி, கடல் குதிரை, கடல் பசு, சிப்பி, சங்கு, பவளப்பாறைகள் என நூற்றுக்கணக்கான அரிய வகை கடல் வாழ் உயிரினங்கள் வாழ்ந்து வருகின்றன.

ராமநாதபுரம் மாவட்டம் திருப்புல்லாணி அடுத்த சேதுக்கரை தெற்கு மன்னார் வளைகுடா கடல் பகுதியில் இருந்து மீன் பிடிக்க செல்லும் மீனவர்கள் வலையில் சமீப காலமாக கடல் பசு, டால்பின் ஆகியவை சிக்குகிறது.

அதை உடனடியாக மீனவர்கள் உயிருடன் பத்திரமாக கடலில் விட்டு விடுகின்றனர். இந்நிலையில் வெள்ளிக்கிழமை (19) சேதுக்கரை தெற்கு மன்னார் வளைகுடா கடற்கரையில் இறந்த நிலையில் 8 வயது மதிக்கத்தக்க ஆபிரியா என அழைக்கப்படும் பெண் கடல் பசு ஒன்று கரை ஒதுங்கியது.

இதனை அவதானித்த மீனவர்கள் கீழக்கரை வனத்துறையினருக்கு தகவல் அளித்தனர். இதையடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த வனத்துறையினர் இறந்து கரை ஒதுங்கிய கடல் பசுவை ஆய்வு செய்து உடற்கூறாய்வுக்காக கால்நடை மருத்துவருக்கு தகவல் தெரிவித்தனர்.

இறந்த நிலையில் கரை ஒதுங்கியது ஆபிரியா என அழைக்கப்படும் பெண் கடல் பசு என்றும் அது சுமார் 300 கிலோ எடை கொண்டது என்றும், அதன் அகலம் 115 செ.மீ, சுற்றளவு 230 செ.மீ தெரியவந்துள்ளதாக வனத்துறையினர் தெரிவித்தனர்.

மேலும் கடல் பசு பாறைகளில் முட்டியதால் உயிரிழந்ததா? அல்லது உடல்நிலை சரியில்லாமல் வயதின் மூப்பின் காரணமாக உயிரிழந்ததா? என கால்நடை மருத்துவர்கள் பிரேத பரிசோதனை செய்த பின்னர் முழுமையான காரணம் தெரியவரும் என கீழக்கரை வனச்சரகர் தெரிவித்தார்.

இதனிடையே சம்பவ இடத்திற்கு வந்த கால்நடை மருத்துவர்கள் உயிரிழந்த கடல் பசுவை உடற்கூறாய்வு செய்தனர். அதன் பின் வனத்துறையினர் இறந்த கடல் பசுவை கடற்கரை மணலில் புதைத்தனர்.

# மன்னார் திருக்கேதீஸ்வர ஆலய பாலாவி தீர்த்தகரை பகுதியில் சூழல் நட்பு மர நடுகை ஆரம்பம்



**- எஸ்.ஆர்.லெம்பேட் (20-09-2025)**

பசுமை மரக்கன்றுகள் நடும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் ஓராயம் நிறுவனத்தின் ஏற்பாட்டில் மன்னார் திருக்கேதீஸ்வர ஆலய பாலவி தீர்த்தக்கரை பகுதியில் சூழல் நட்பு மர நடுகை 20ம் திகதி அன்று சனிக்கிழமை காலை 11 மணியளவில் இடம் பெற்றது.





ஓராயம் நிறுவனத்தின் தலைவர் மோசஸ் மரியதாசன் தலைமையில் திருக்கேதீஸ்வரம் ஆலய அறங்காவலர்கள், ஓராயம் நிதியம் மற்றும் மன்னார் வனத் திணைக்களம் ஆகியவற்றின் கூட்டு முயற்சியில் குறித்த மர நடுகை நிகழ்ச்சித்திட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன் போது ஆரம்ப நிகழ்வுகள் ஆலய மண்டபத்தில் இடம்பெற்றது.அதனைத்தொடர்ந்து தீர்த்தக்கரை பகுதியில் சூழல் நட்பு மர நடுகையும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

# மன்னாரில் காற்றாலை திட்டங்களை தொடர்வது ஜனாதிபதியின் முடிவென்றால் எமது மண்ணை மீட்க போராடுவது எமது உரிமை

## மன்னாரில் வெகு விரைவில் மாவட்டம் தழுவிய ரீதியில் போராட்டம்




**- மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் அருட்தந்தை எஸ்.மாக்கஸ் அடிகளார்**
**- எஸ்.ஆர்.லெம்பேட் (24-09-2025)**

மன்னாரில் காற்றாலை திட்டங்களை தொடர்வது ஜனாதிபதியின் தன்னிச்சையான முடிவாக இருந்தாலும் எமது மண்ணையும் வளங்களையும், உரிமையையும், பாதுகாக்க போராட்டங்களை தொடர்வது எமது உரிமை என்றும், சில தினங்களில் மாவட்டம் தழுவிய ரீதியில் பாரிய போராட்டம் வெடிக்கும் என மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் அருட்தந்தை எஸ்.மாக்கஸ் அடிகளார் எச்சரித்துள்ளார்.

மன்னார் போராட்டக்களத்தில் 24ம் திகதியன்று புதன்கிழமை மதியம் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், மன்னாரில் முன்னெடுக்கப்படவுள்ள காற்றாலை மின் கோபுரம் அமைத்தல் மற்றும் கணிய மணல் அகழ்வுக்கு எதிராக முன்னெடுக்கப்பட்டு வருகின்ற போராட்டம் புதன்கிழமை (24) 53 ஆவது நாளாகவும் தொடர்கின்றது.

செவ்வாய்க்கிழமை (23) ஜனாதிபதி செயலகத்தில் இருந்து மன்னார் மாவட்டச் செயலகத்திற்கு காற்றாலை மின் கோபுரங்கள் அமைப்பது தொடர்பான தனது செய்தியை அனுப்பி உள்ளார். மன்னாரில் குறித்த 14 காற்றாலை மின் கோபுரங்கள் அமைக்கும் பணிகள் நிறுத்த தேவையில்லை. அதற்கான பணிகளை தொடர்ந்து முன்னெடுக்குமாறும், அதனால் ஏற்படுகின்ற பாதிப்புக்கள் மற்றும் முன்னர் ஏற்பட்ட பாதிப்புக்களையும் நிவர்த்தி செய்ய வேண்டும் என்ற கட்டளையையும் மன்னார் மாவட்டச் செயலகத்திற்கு வழங்கியுள்ளார்.

எதை வைத்து குறித்த அனுமதியை ஜனாதிபதி வழங்கியுள்ளார் என்று எமக்கு தெரியவில்லை.பல முறை குறித்த திட்டம் குறித்து அதிகாரிகளுடனும், அமைச்சர்களுடனும், ஜனாதிபதியுடனும் தொடர்பு கொண்டு மக்களுடைய கருத்துக்களையும், எங்களுடைய கருத்துக்களையும் முன் வைத்தோம்.

எனினும் மக்களின் கருத்துக்கு மதிப்பளிக்காமல், தான்தோன்றித்தனமாக தனது சுய முடிவை எடுத்துள்ளமை மன வேதனையை நம்பியிருந்த எமக்கு ஏற்படுத்தியுள்ளது.

வாழ்வது எமது உரிமை. அதை யாரும் பறிக்க முடியாது. அந்த உரிமைக்காக நாங்கள் தொடர்ந்தும் போராடுவோம். எமது போராட்டம் விரிவடைகிறது என்பதை உங்களுக்கு கூறிக் கொள்ள விரும்புகின்றோம். எமது மூன்று கோரிக்கைகள் நிறைவேறும் வரை எமது போராட்டம் தொடரும். மாவட்ட ரீதியில் மக்கள் அனைவரையும் ஒன்றிணைத்து பாரிய போராட்டமாக மாறவுள்ளது.

நாங்கள் சட்டத்தை மீறுகின்ற போராட்டமாக ஏனையவர்களுக்கு இடையூரை ஏற்படுத்துகின்ற போராட்டமாக இப்போராட்டம் ஒருபோதும் அமையாது.

இவற்றுக்கு எதிராக சட்ட ரீதியான நடவடிக்கைகளையும் நாங்கள் முன்னெடுத்து வருகின்ற போதும், எமது கோரிக்கைகளை முன்வைத்து போராட்டம் முன்னெடுக்கப்படும். கவலைக்குரிய விடயம் என்ன என்றால் எமது மன்னார் மாவட்டச் செயலகம் அரச அதிபர் மற்றும் அவருடன் கடமையாற்றுகின்ற அதிகாரிகளுடைய செயல்பாடுகள் எமக்கு மிகவும் கவலையை ஏற்படுத்துகின்றது.

குறித்த கடிதம் ஜனாதிபதி செயலகத்தில் இருந்து செவ்வாய்க்கிழமை (23) காலை மன்னார் மாவட்டச் செயலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது. எனினும் அன்று மாலை ஒருவரை அனுப்பி இக்கடிதத்தை பெற்றுக் கொண்டுள்ளோம். மிகவும் வேதனையான விடையமாக அமைந்துள்ளது.

கடந்த 40 நாட்களாக இடம் பெற்ற வேலைத்திட்டங்களை மாவட்டச் செயலகம் கண்காணிக்கவில்லை என்பதை இவ்விடத்தில் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

மாவட்டச் செயலகமும், அதிகாரிகளும் இத்திட்டங்களுடன் ஒத்துப்போகின்றார்களா? என்கின்ற சந்தேகம் எழுந்துள்ளது. மக்களை அழிக்கும், மக்களின் வாழ்விடங்கள் கொண்ட, இத்தீவை இல்லாது செய்கின்ற செயல்பாடுகளுடன் அதிகாரிகள் அனைவரும் இணைந்து போகின்றார்களா?, என்கிற சந்தேகமும் எழுந்துள்ளது.

அவர்களின் செயல்பாடு மிகவும் வேதனையை ஏற்படுத்தியுள்ளது. மக்களாகிய நாங்கள் ஒன்றிணைந்து எமது மண்ணையும், வளங்களையும், உரிமையையும் பாதுகாக்க எமது போராட்டம் தொடரும். இனி வரும் நாட்களில் இப்போராட்டம் பல்வேறு வடிவங்களில் முன்னெடுக்கப்படும்.

எதிர்வரும் திங்கட்கிழமை (29) மன்னாரில் மாவட்ட தழுவிய ரீதியில் போராட்டம் ஒன்றை முன்னெடுக்க தீர்மானித்துள்ளோம். அனைத்து தரப்பினரும் கலந்து கொண்டு எமது சக்தியை இந்த அரசுக்கு காண்பிக்க வேண்டும். ஜனாதிபதி தன்னிச்சையாக இந்த முடிவை எடுத்துள்ளார் என்பதே மிகவும் கவலைக்குரிய விடயம்.

மக்களை பாதிக்காத வகையில் நடவடிக்கை களை எடுப்போம் என அனைத்து அதிகாரிகளும் தெரிவித் திருந்தனர். ஆனால் ஜனாதிபதியினுடைய அறிவித்தல் வேதனையை ஏற்படுத்தியுள்ளது. அது ஜனாதிபதியின் முடிவாக இருக்கின்ற நிலையில், எங்களுடைய முடிவு எங்களுடைய உரிமைகளை பெற்றுக் கொள்ளுவோம் என்ற ஒரு முடிவு தான்.

எனவே இந்த போராட்டக் களத்தில் இருந்து சட்டங்களை மீறாது எமது போராட்டத்தை தொடர்ந்து முன்னெடுப்போம்.

சட்ட ரீதியாக மூன்று நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றோம். கனிய மணல் அகழ்விற்கு எதிராக சட்ட ரீதியாக நடவடிக்கையை முன்னெடுத்து வருகிறோம். 14 காற்றாலை திட்டங்களுக்கு எதிரான இரு வழக்குகளை தாக்கல் செய்வதற்கான அனைத்து நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளது. என அவர் மேலும் தெரிவித்தார்.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# இலங்கையின் கிழக்கு மாகாணத்திலிருந்து சமூகத்தின் மீது கரிசனை கொண்ட ஒரு நவீன ஓவியக் கலைஞரின் ஆதங்கமும் அறிவுப் பகிர்வும்

நான் (வெற்றிவேலாயுதம், கலாமணிக்கம்) ஜதிஸ்குமார். அம்பாறை மத்தியமுகாம் 11ஆம் கிராமத்தில் பிறந்து கல்முனனுசது - சரஸ்வதி வித்தியாலயத்தில் ஆரம்பக் கல்வியினையும் கல்முனை றாணமடு இந்துக் கல்லூரியில் இடைநிலை கல்வியினையும் உயர்தரத்தினையும் கற்றுக்கொண்டேன். அப்போது செல்வசிகாமணி ஆசிரியரிடமும், திரு. த. வாமதேவன் ஆசிரியரிடமும் சித்திரக்கலைக் கல்வியினைக் கற்று சுவாமி விபுலானந்த அலகியல் கற்கைகள் நிறுவகத்தில் கட்புலமும் தொழிநுட்பக் கலையும் பாடத்தில் இளம் நுண்கலைமானிப் பட்டத்தினையும் பெற்றுக்கொண்டேன். 2017ஆம் ஆண்டிலிருந்து வன்முறையற்ற வாழ்வுக்கான காண்பியக் கலைப் படைப்பாளர்களுடன் இணைந்து கண்காட்சிகளில் பங்குபற்றி வருகின்றேன்.

எனது ஓவியங்கள் உள்ளூரில் வாழ்கின்ற பெண்களுக்கு நுண் கடன் மூலமாக ஏற்படுகின்ற வன்முறைகளையும் பாதிப்புக்களையும் வெளிப் படுத்துவதாகவும், அந்த வன்முறைகளில் இருந்து மீண்டெழ உள்ளூர் வளங்களைக் கொண்டு மேற்கொள்ளும் நிரந்தர உற்பத்தி தங்களது பொருளாதாரத்திற்கும், நாட்டின் பொருளாதாரத்திற்கும் அத்தியவசியமானது என்பதை வெளிப் படுத்துவதாகவும் அமைகின்றன. நான் உள்ளூர் ஓவியனாக, உள்ளூர்ப் பெண்களின் பிரச்சினைகளை எனது காண்பியக் கலைப் படைப்புகளினூடாக வெளிப்படுத்துவதனால் தற்போது உள்ளூரிலிருந்து கிடைக்கக்கூடிய பொருட்களையும், பாரம்பரிய பின்னல் முறைகளையும் எ னது கலைப் படைப்பிற்காக பயன்படுத்துகின்றேன். இது கலை வெளிப்பாடு சார்ந்தும் கருத்தியல் சார்ந்தும் பிரச்சினைகளை வெளிப்படுத்துவதற்கு பொருத்தமானதாக அமையுமென நம்புகின்றேன்.

- **வெற்றி ஜதிஸ்குமார்**

### மீண்டெழல்

பெண்கள் அடிமைப்படுத்தப் படுவதும் வன்முறைக்குட்படுத்தப் படுவதும் காலாகாலமாக நடந்துகொண்டே இருக்கின்றன. ஆதிக்கச் சமூகமும், ஆதிக்கச் சிந்தனையாளர்களும் அதற்கென பல உத்திகளைக் கையாழ்கின்றனர். அவற்றில் ஒரு துமியே எனது கருத்தியல். நுண்கடன் எனும் ஒழுங்கு முறையற்ற திட்டத்தால் பெண்கள் அனுபவித்த துன்பங்களும், துயரங்களும் மிக மோசமானவை. கடன் திட்டங்கள் ஒருவருடைய பொருளாதார வாழ்வை மேம்படுத்துவதாக இருக்க வேண்டும். ஆனால் சில கடன் திட்டங்கள் பெண்களின் பொருளாதார வாழ்வை சீர்குலைத்தது என்பதே உண்மை. நுண் கடன் எனும் வலையில் பெண்கள் விழக் காரணம் நிரந்தர உழைப்பின்றி மற்றொருவரை நம்பி. தங்கி வாழ்தலும் ஆகும்.

நுண் கடன் எனும் சதியிலிருந்து மீண்டெழல், நுண் கடனால் ஏற்பட்ட வன்முறைகளில் இருந்து மீண்டெழல், தங்கி வாழும், பிறரை நம்பி வாழும் எண்ணங்களில் இருந்து மீண்டெழல், முடங்கிக் கிடக்கும் பெண்கள் தங்களது பொருளாதாரத்தில் வேர் ஊன்றி நிற்கவும்மற்றொருவரின் கட்டுப்பாடு இன்றி சுதந்திரமாக வாழவும் மீண்டெழல் அவசியமாகின்றது.

### நுண் கடன் (Micro Loans)

“இஞ்சி கொடுத்து மிளகு வாங்கியது போல” எனச் சொல்லப்படும் அரசியல் ரீதியாக நம் நாட்டவர்க்கு ஏற்பட்ட ஏமாற்றத்தை நாம் அறிந்திருக்கின்றோம். அதை விடப் பெரிய ஏமாற்றமும் இங்கு இடம்பெற்றிருக்கின்றன. பெண்களின் பொருளாதாரத்தை மேம்படுத்தும் திட்டம் எனும் பெயரில் அவர்களுக்கு நிதிகளை வழங்கி அந்த நிதிகளைக்கொண்டு தொழிலைத் தொடங்க முன் கிழமைக்கு ஒரு முறை நிதியை அறவிடுவதும் அதிக வட்டி வசூலிப்பதும் செலுத்தத்தவறும் பட்சத்தில் கடன் பெற்ற பெண்களை உடல், உள ரீதியாக வன்முறைக்குட்படுத்துவதும், பெண்களின் உழைப்பை உறிஞ்சுவதும், ஏமாற்றுவதும் என்பது இஞ்சி கொடுத்து மிளகு வாங்கியதை விட கொடுமையானது.

இங்கு பெண்கள் தமது பொருளாதாரத்தை மேம்படுத்த வேண்டுமென பெற்றுக்கொண்ட நுண் கடன்கள் அவர்களது பொருளாதாரம் இருந்ததை விட மிக மோசமாகப் பாதிக்கப்படுவதற்கும் மன அழுத்தத்திற்கு உள்ளாவதற்கும் உயிரைத் துறப்பதற்கும் காரணமாகிவிடுகிறது. நம் நாட்டவர்கள் நம் நாட்டு மக்களை நுண்கடன் எனும் திட்டத்தின் மூலம் ஏமாற்றி தங்கள் பொருளாதாரத்தை வளர்த்துக்கொள்கின்றனர். கடன் பெற்ற பெண்கள் இருந்த சுமையுடன் இன்னும் கடன் சுமையை சுமப்பது இஞ்சி கொடுத்து மிளகு வேண்டியதை விட மிளகாய் வேண்டுவதற்கு சமமானது.

### அடையாளம் – I, II, III

நாம் ஒவ்வொருவரும் ஏதோ ஒரு தொழிலைச் செய்கின்றோம். அந்தத் தொழில்களில் அதிக அதிகாரமுடையது, குறைந்த அதிகாரமுடையது, அதிக ஊதியம் கிடைப்பது, குறைந்த ஊதியம் கிடைப்பது என பல வகைகளைச் சேர்ந்த தொழில் ஈடுபடுவோர் காணப்படுகின்றனர். மேற்குறிப்பிட்ட தொழில் நிலைக்கு ஏற்ப ஒவ்வொருவருடைய அதிகாரமும், சிந்தனையும், செயற்பாடும் வேறுபடும். அந்த அதிகார நிலையில் இருப்பவர்கள் மற்றவர்களை அடக்கி ஆழ்பவர்களாக, வன்முறைக்குட் படுத்துபவர்களாக அல்லாமல் அனைவரையும் நேசிக்கின்ற சமத்துவத்தைப் பேணுகின்றவர்களாக இருத்தல் வேண்டும். இந்த நல்ல சிந்தனையை எங்கள் அடையாளமாகக் கொள்வோம்.



### வளங்கள்

உள்ளூர் உற்பத்திகளுக்கு மிக முக்கியமானது உள்ளூர் வளங்கள். அவற்றைக் கொண்டே உள்ளூர் உற்பத்திகளை மேற்கொள்ள முடியும். ஆதியிலிருந்தே எங்களது முன்னோர்கள் அவ் உற்பத்திகளை மேற்கொண்டு வந்திருக்கின்றனர். உள்ர் வளங்களைக் கொண்டு உற்பத்திகளை மேற்கொள்ளுவதில் பெண்களுக்கு மிகப் பெரிய பங்குண்டு. எங்கள் பிரதேசத்தில் அவ்வுற்பத்தியாளர்களுக்கு சரியான அங்கிகாரம் கிடைப்பதில்லை. நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்த உள்ளூர் உற்பத்திகள் மிக முக்கியமானவை. இறக்குமதிகளை நம்பி அவற்றைப் பயன்படுத்துவதில் பெருமைகொண்ட நாங்கள் கடந்த கால பொருளாதார நிலையால் இறக்குமதிகள் தடைப்பட்ட போது இறக்குமதிப் பொருட்கள் கிடைக்காமல் அவற்றை அதிக விலைக்குச் சிலர் விற்பனை செய்ததும் நாம் வாங்கியதும் சிறந்த பாடத்தைக் கற்றுத் தந்தது. உள்ளூர் உற்பத்திகளே எப்போதும் எங்களுக்கு குறைவின்றிக் கிடைக்கக்கூடியவை. அவற்றை மேற்கொண்டு வருகின்ற பெண்களும் எங்களது மிக முக்கியமான வளங்கள். உள்ர் உற்பத்திகளையும் அவ்வுற்பத்திகளை மேற்கெள்ளுகின்ற பெண்களையும் மதிப்போம்.

### அபிவிருத்தி

இலங்கையின் பொருளாதாரம் மிக மோசமான நிலையை அடையக் காரணம் முறையான திட்டமிடல் இன்றிய பொருளாதாரக் கொள்கைகளும், செயற்பாடுகளுமாகும். மக்களின் பணத்தைக் கொண்டு மேற்கொள்ளப்படுகின்ற அபிவிருத்தி குறுகிய காலப் பயன்பாட்டு நோக்கம் இல்லாது எதிர்கால சமூகத்தின் பயன்பாட்டிற்கும் நீடித்து நிலைத்திருக்கக் கூடியதாகவும் அமைதல் வேண்டும். மக்களுக்குப் பயன்படாத திட்டங்களும் அவர்களின் அனுமதியின்றி மக்களைக் கடனாளியாக்கும் கடன் சுமைகளும் நாட்டின் பொருயாதாரத்தை மேலும் சீர்குலையச் செய்யும். மக்களின் பயன்பாட்டிற்கு உதவாத அவர்களை கடனாளியாக்குகின்ற கொள்கைகளும் திட்டங்களும் நாட்டின் மக்கள் மீது மறைமுகமாக நிகழ்த்தப்படும் வன்முறைகளாகும்.

### சூழ்ச்சி

கடன் எனும் முடிச்சுக்குள் சிக்கவைத்து அதிலிருந்து பெண்களின் உழைப்பை உறிஞ்சி தங்களை உயர்திக் கொள்ள பெண்களைச் சுற்றி பல சூழ்ச்சிகள் இடம்பெருகின்றன. சில முதலாளித்துவ சிந்தனையாளர்கள் நுண் கடன் எனும் திட்டத்தை மிகப் பெரும் வணிகமாக மேற்கொண்டு வருகின்றனர். எங்களைச் சுற்றி நிகழ்த்தப்படுகின்ற சூழ்ச்சிகளை மதியால் வெற்றிகொள்வோம்.

### சுரண்டல்


பெண்களின் பொரளாதார வாழ்வை மேம்படுத்த அவர்கஞ்கது தொழில் வழங்குவது மிச்சிறந்த சேவையாகும். அதே போல் பெண்களின் உழைப்பிற்கு தகுந்த ஊதியத்தை வழங்குவதும் நற் பண்புகளில் ஒன்று. முதலாளித்துவ சிந்தனையாளர்கள் பெண்களின் உடலுழைப்பை தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தி தமது சுகபோக வாழ்கையை வாழ்கின்றனர். இன்னும் சிலர் பெண்களின் உழைப்பை நேரடியாகவும், மறைமுகமாவும் சுரண்டுகின்றனர். இச் செயற்பாடு நீண்ட காலமாக நமது சமூகத்திலும், வெளிச் சமூகத்திலும் (மலையகம்) தொடர்ந்துகொண்டே இருக்கின்றது.

### COVID-19

கொரோனா பெருந்தொற்றுக் காலத்தில் பெரும்பாலானோரின் வாழ்வியல் பாதிக்கப்பட்டது. குறிப்பாக உள்ர் உற்பத்தியாளர்களின் தொழில் மற்றும் பொருளாதாரம் மிக மோசமாக பாதிக்கப்பட்டது. கொரோனாப் பரவலைத் தடுக்க அரசாங்கம் வான்வழி, கடல்வழி, உள்ளூர்ப் போக்குவரத்து அனைத்தையும் தடைசெய்து ஊரடங்கு உத்தரவைப் பிரப்பித்தது. இதன் காரணமாக அன்னியச் செலாவணி குறைவடைந்து இறக்குமதிகள் தடைசெய்யப்பட்டு இறக்குமதிப் பொருளாதாரமும் பாதிக்கப்பட்டது. ஏற்றுமதியைக் குறைத்து இறக்குமதியை நம்பியிருந்த எமக்கு பொருளாதாரம் சிறந்த பாடத்தைக் கற்றுத்தந்தது.










ON MONDAY
SEPTEMBER 29
VOTE
BRING BACK
#17
on the ballot
Neethan
Shan
LAST TIME, WE LOST
BY LESS THAN 1%
YOUR VOTE IS PRECIOUS.
DON'T WASTE IT.
LET'S WIN TOGETHER.
AT WHAT TIME WILL YOU VOTE?
MORNING
AFTERNOON
EVENING
BRING YOUR FAMILY AND NEIGHBOURS
BRING YOUR ID AND PROOF OF ADDRESS
Steeles Ave East
Neilson Ave
Hwy 401
Morningside Ave
Lake Ontario
நீதன்:
நமது சமூகத்துக்கு நல்ல சேவைகளை வழங்கியுள்ளார்.
தமிழர் சமூக மையத்தைத் தொடங்கும் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றினார்.
நகர சபையில் எம்மை வலிமையுடன் வழிநடத்தினார்.
நீதன் தேர்ந்தெடுக்கப்பட்டால்:
ஸ்காபரோப்பகுதியில் இளைஞர்களுக்கான வேலை வாய்ப்புகள்.
மூத்தோருக்கு இலவசப் போக்குவரத்துச் சேவை.
வாகனங்களின் அதிவேகம், வாகனத் திருட்டு மற்றும் வீடுகள் உடைத்துத் திருடுதல் ஆகியவை கட்டுப்படுத்தப்பட்ட பாதுகாப்பான சமூகம்.
FOR MORE INFORMATION OR A RIDE TO THE POLLS CONTACT US: 647-852-7574

# தமிழரின் ஆணித்தரமான குரல்
# ஆரணி முருகானந்தன்




**பல்லின சமூக ஆதரவு**



**Paul Chiang**
Former Member of Parliament



**Khalid Usman**
Former City Councillor,
Ward 7 - Markham



**Sam Erry**
Corporate Executive
Long-time Markham Resident



**Andrew Keyes**
City Councillor,
Ward 5 - Markham



**Tessa Benn-Ireland**
Former Justice of the Peace
Former Tustee, YRDSB

**7ம் வட்டாரத்தில் தமிழ் பிரதிநிதித்துவம் காக்க**
**வாக்குகள் சிதறாது ஆரணிக்கு வாக்களியுங்கள்.**

உங்கள் ஆதரவை வழங்க தொடர்பு கொள்ளுங்கள் (647) 517 2390 | vote@araneeward7.ca




Elect
# Zakir Patel
FOR SCARBOROUGH – ROUGE PARK

*Getting Things Done!*

Scarborough Rouge Park
தொகுதிக்கான பலமானதும்
நம்பிக்கையுடையதுமான குரல்!



**ELECTION DAY**
**திங்கட்கிழமை செப்டம்பர் 29**
காலை 10.00 மணி தொடக்கம்
இரவு 8.00 மணிவரை




**தலைமைத்துவம், சேவை மற்றும் கடமை உணர்வு ஆகியன**

**Public Service Leadership Roles:**
✓ Vice-Chair - Toronto District School Board (TDSB)
✓ Chair - Finance, Budget & Enrollment Committee, TDSB
✓ Member - Special Education Advisory Committee, TDSB

**Community & Volunteer Involvement:**
✓ Secretary - Scarborough Cricket Association
✓ Volunteer - Scarborough Health Network (SHN)
Scarborough Muslim Community

**Recognition & Achievements:**
✓ Urban - Hero Award - Metroland Media
Recognized for Pandemic Community Support
✓ Remarkable Father's Award
Nigerian Canadian Newspaper Canada

Need ride to vote, please call:
437 267 6843
647 249 8528




HOW YOU
CAN HELP?
- Volunteer
- Reqest a lawn sign
- Make a donation

செப்டம்பர் 29 அன்று சாகிர் பட்டேல் அவர்களுக்கு
25ம் வட்டார நகரத்தின் அங்கத்தவராக தேர்ந்தெடுக்க வாக்களியுங்கள்

647-249-8528 | info@votezakir.ca | www.votezakir.ca | zakir4rouge



Carefirst Family Health Team

# Carefirst Family Health Team

**Accepting New Patients**
**புதிய நோயாளர்கள்**
**ஏற்றுக் கொள்ளப்படுகின்றனர்**

- அனுபவமுள்ள தமிழ் பேசும் பெண் குடும்ப மருத்துவர் எங்களது ஸ்கார்பரோ கிளினிக்கில் இணைந்துள்ளார். (Scarborough Clinic)
- உங்களது சுகாதார சேவைகளைப்பூர்த்தி செய்ய கார்த்திருக்கிறார்.
- நீரழிவு இருப்பின் அது சம்பந்தமான கல்வித்திட்டமும் அவரால் ஒழுங்கு செய்து தரப்படும்.
- நாள்பட்ட நோய்க்கான கல்வியும் (chronic disease), மேலாண்மை திட்டங்களும் அவரால் வழங்கப்படும்.



அவர் விபரம்:

டாக்டர் அஞ்சலின் ராஜரத்தினம் (Scarborough Clinic)

டாக்டர். ராஜரத்தினம் அக்கறையும் அர்ப்பணிப்பும் கொண்ட குடும்ப மருத்துவர் ஆவர்.

**உங்கள் குடும்ப மருத்துவத்தேவை, மற்றும் டாக்டர் ராஜரத்தினத்தின் நோயாளியாக பதிவு செய்ய விரும்பினால், கீழே உள்ள QR குறியீட்டை ஸ்கேன் செய்யவும் அல்லது https://forms.office.com/r/upqD0q5TGL க்குச் சென்று படிவத்தை நிரப்பவும் உங்கள் சுயவிவரத்தை உருவாக்க எங்களுக்கு உதவ, உங்கள் விபரங்களை பதிவு செய்யுங்கள்.**

Availability of New Family Doctor at Carefirst Family Health Team - Dr. Rajaratnam

**Clinic Location:**
**Carefirst One-Stop Multi-Services Centre**
**300 Silver Star Blvd., 2/F**
**Scarborough, ON M1V 0G2**
**Tel: (416)502-2029**
**www.carefirstontario.ca**
11/24




HSB
CANADA
SARAVANAA BHAVAN®
WORLD'S NO.1 INDIAN VEGETARIAN RESTAURANT CHAIN
ஸ்கார்ப்ரோ &
டெல்டா வில் மட்டும்
புரட்டாசி சனி
விரத சாப்பாடு
செப்டம்பர் 20, 27, அக்டோபர் 4 & 11, 2025
சிறப்பு உணவுகள்
• சூப்
• பிளைன் தோசை
• மிளகாய் பொடி தோசை
• பட்டர் தோசை
• நெய் தோசை
• மினி ஊத்தப்பம்
• இட்லி
• பூரி
• ரவா கிச்சடி
• மெது வடை
• ஆனியன் பக்கோடா
• அன்லிமிடெட் தோசை / பூரி / வடை
• நெய் பொங்கல்
• உருளைக்கிழங்கு மசாலா
• டிபன் சாம்பார்
• கலவை காய்கறி சாம்பார்
• தேங்காய் சட்னி
• ஸ்பெஷல் சட்னி
• சாப்பாடு
• ஸ்பெஷல் சாப்பாடு / நூடுல்ஸ்
• செஃப் ஸ்பெஷல் பிரியாணி
• சாம்பார் சாதம்
• தயிர் சாதம்
• காய்கறி கூட்டு
• காய்கறி பொரியல்
• ஸ்பெஷல் பொரியல்
• தந்தூரி கறி
• ஸ்பெஷல் குழம்பு
• ரசம்
• தயிர்
• பச்சடி
• அப்பளம்
• மோர் மிளகாய்
• ஊறுகாய்
• பாயசம்
• ரவா கேசரி
• பருப்பு பொடி
• நெய்
SCARBOROUGH 416 293 7755
MISSISSAUGA 905 290 0769
BRAMPTON 905 457 7575
DELTA B.C 778 578 7575

இலங்கை செய்திகள் Sri Lanka News

மன்னார் நிருபர்

# மன்னாரில் காற்றாலை கோபுரங்கள் அமைக்கும் உபகரணங்களை திருகோணமலை துறைமுகத்திலிருந்து மன்னாருக்கு கொண்டு வருவதை நிறுத்துங்கள்

## மன்னார் அரசாங்க அதிபருக்கு மகஜர் கையளிப்பு

- எஸ்.ஆர்.லெம்பேட் (25-09-2025)

மன்னாரில் காற்றாலை கோபுரங்கள் அமைக்க தேவையான உபகரணங்களை திருகோணமலை துறைமுகத்தில் இருந்து மன்னார் தீவுக்கு கொண்டு வரும் வேலைகள் நடைபெறுகின்ற நிலையில் தயவுசெய்து அவற்றை உடன் நிறுத்தி மக்களிடம் பேச நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் அருட்தந்தை எஸ்.மாக்கஸ் அடிகளார் தெரிவித்துள்ளார்.

25ம் திகதி அன்றைய தினம் வியாழக்கிழமை மதியம் மன்னார் மாவட்ட செயலகத்திற்கு சென்று மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் இடம் கையளித்த மகஜரில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

குறித்த மகஜரில் மேலும் குறிப்பிடுகையில், மன்னார் மக்கள் 50 நாட்களுக்கு மேலாக போராட்டம் செய்து கொண்டு, ஜனாதிபதியிடம் இருந்து நல்ல முடிவுகள் வரும் என்று எதிர்பார்த்து இருந்த வேளையில், இவ்வாறான ஒரு கடிதம் வந்திருக்கிறது. அதை நீங்கள் உடனடியாக எங்களுக்கு தரவில்லை என்பதும் கவலை அளிக்கிறது.

கடிதத்தை நாங்கள் வந்து தான் பெற்றுக் கொண்டோம். ஜனாதிபதியின் முடிவுகள் மன்னார் மக்களுக்கு மிகவும் அதிர்ச்சியையும் கவலையையும் தருகிறது.ஜனாதிபதி தனது மக்களாகிய எங்களுடன் பேசுவார் மக்களின் வாழ்வை பாதிக்காத வகையில் கலந்தாலோசித்து முடிவுகள் எடுப்பார் என எதிர்பார்த்து இருந்தோம்.

நாங்கள் வஞ்சகமான முறையில் ஏமாற்றப் பட்டுள்ளோம். ஜனாதிபதியின் முடிவுகளை நாங்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. உடன் வேலைகளை நிறுத்தி ஜனாதிபதியுடன் பேசி முடிவுகளை எடுக்க எதிர்பார்க்கின்றோம்.

காற்றாலை கோபுரங்கள் அமைக்க தேவையான உபகரணங்களை திருகோணமலை துறைமுகத்தில் இருந்து மன்னார் தீவுக்கு கொண்டு வரும் வேலைகள் நடைபெறுகிறது.



தயவுசெய்து அவற்றை உடன் நிறுத்தி மக்களிடம் பேசவும். மக்களுடைய விருப்பத்திற்கும் உரிமைக்கும் எதிராக நீங்கள் செய்ய இருக்கும் நடவடிக்கைகளினால் ஏற்படும் அனைத்து இழப்புகளுக்கும், அழிவுகளுக்கும் நீங்களே பொறுப்பு கூற வேண்டி வரும்.

ஜனாதிபதியுடன் கலந்தாலோசித்து முடிவுகள் எடுக்கும் வரை மக்கள் போராட்டமானது இலங்கை யாப்பிற்கும் சட்டத்திற்கும் உட்பட்டு முன்னெடுக்கப்படும். எங்கள் புனித போராட்டமானது விரிவடைந்து செல்வது உங்களுக்கு தெரியும். அதை இன்னும் விரைவாக எமது நாடு பூராவும் விரிவுபடுத்த உள்ளோம்.

ஜனாதிபதி அவர்களினால் தரப்பட்ட ஒரு மாத கால வேலை நிறுத்தத்தை கவனிப்பதற்கு ஒரு குழு உங்கள் தலைமையில் உருவாக்கப்பட்டது. உங்கள் குழுவானது அந்த பகுதியில் நடந்த வேலைகளை பார்வையிட்டு அறிக்கை சமர்ப்பிக்கவில்லை.

இலங்கை மின்சார சபையானது பாரிய வேலைகளை முன்னெடுத்துள்ளது. தரப்பட்ட கடிதங்கள் தெளிவில்லை ஏமாற்றப் படுகின்ற விதத்தில் அமைந்துள்ளது.

எனவே தயவு செய்து உடனடியாக மக்களின் வாழ்வினையும் வளத்தையும் பாதுகாக்க நடவடிக்கை மேற் கொள்வதை எதிர்பார்க்கின்றோம் என குறித்த கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கை செய்திகள் Sri Lanka News

# யாழ்ப்பாணத்தில் பிறந்து சிறிது நேரத்தில் உயிரிழந்த இரட்டை குழந்தைகள்!

யாழ்ப்பாணத்தில் பிறந்த இரட்டைக் குழந்தைகளில் ஒரு குழந்தை உயிரிழந்து பிறந்ததுடன் மற்றைய குழந்தை பிறந்து 45 நிமிடங்களில் உயிரிழந்த சம்பவம் பதிவாகியுள்ளது. சோமசுந்தரம் வீதி, ஆனைக்கோட்டை பகுதியைச் சேர்ந்த நிமலராஜ் சாருமதி தம்பதிகளின் குழந்தைகளே இவ்வாறு உயிரிழந்துள்ளது.

இது குறித்து மேலும் தெரியவருகையில், குறித்த குழந்தைகளின் தாயாருக்கு கடந்த 21ஆம் திகதி இரவு திடீரென வலிப்பு ஏற்பட்டது. இந்நிலையில் யாழ்ப்பாண போதனா வைத்தியசாலைக்கு கொண்டு சென்றனர்.

இதன்போது அறுவைச் சிகிச்சை மூலம் குழந்தையை வெளியே எடுத்தபோது பெண் குழந்தை இறந்த நிலையில் காணப்பட்டது. ஆண் குழந்தை உயிருடன் பிறந்த நிலையில் 45 நிமிடங்கள் கழித்து உயிரிழந்துள்ளது.

குழந்தைகளின் சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார்.



# 'தியாக தீபம்' திலீபன் யாருக்காவது தனியுரிமை சொத்தா?

## எதிரிகள் கூட அஞ்சலி செலுத்துவதுதான் அந்த தியாகியான வீரனுக்கு கிடைக்கும் உயர்ந்தபட்ச கௌரவம்.



***"செம்மணிக்கு அஞ்சலி செலுத்த வந்த அமைச்சரை அஞ்சலி செலுத்த விடாது விரட்டி விட்டு யாழ்ப்பாணம் வந்த ஜனாதிபதி செம்மணிக்கு வரவில்லையென ஒப்பாரி வைத்தனர். இப்போது திலீபனுக்கு அஞ்சலி செலுத்த வந்த அமைச்சரை மீண்டும் விரட்டியுள்ளனர். திலீபனை உரிமை கொண்டாட இவர்கள் யார்? திலீபனுக்கு அஞ்சலி செலுத்த யார் வரலாம் யார் வரக்கூடாது என்பதனை தீர்மானிக்க இவர்களுக்குள்ள உரிமை என்ன? ஒரு தியாகிக்கு, வீரனுக்கு எதிரிகூட அஞ்சலி செலுத்த முடியும். அவ்வாறு எதிரிகள் கூட அஞ்சலி செலுத்துவதுதான் அந்த தியாகி, வீரனுக்கு கிடைக்கும் உயர்ந்தபட்ச கௌரவம்."***

---------------------------------------------------------------------- பாலா ---

**செ**ம்மணி மனிதப்புதைகுழி அகழ்வு இடத்திற்கு அஞ்சலி செலுத்த வந்த அமைச்சர் சந்திரசேகர் தலைமையிலான எம்.பி.க்கள் குழுவினர் விரட்டியடிக்கப்பட்டமை தொடர்பில் எழுந்த எதிர்ப்புக்கள், கண்டனங்கள், கவலைகள், விமர்சனங்கள் தணிவதற்குள் தியாகதீபம் திலீபனுக்கு அஞ்சலி செலுத்த வந்த அமைச்சர் சந்திரசேகர் தலைமையிலான குழுவினர் மீண்டும் விரட்டியடிக்கப்பட்ட சம்பவம் நடந்தேறியமை மீண்டும் தமிழர் தேசத்தை விசனத்துக் குள்ளாக்கியுள்ளதுடன் இவ்வாறு விரட்டுபவர்களின் அரசியல் நாகரிகத்தையும் அரசியல் அடாவடித்தனத்தையும் விமர்சனத்துக்குள்ளாக்கியுள்ளது.

ஈழத்தமிழரின் போராட்ட வரலாற்றில் வரிப்புலிகளாக, வான் புலிகளாக, ஆகாய, கடல், தரைக் கரும்புலிகளாக, வேவுப் புலிகளாக, பல்லாயிரக்கணக்கான போராளிகள் தமது இன்னுயிரைத் தியாகம் செய்துள்ளனர். இவ்வாறான போராளிகளில் அகிம்சை என்னும் ஆயுதத்தைக் கையிலேந்தி, காந்திய வழியில் தமிழ் மக்களின் விடிவிற்காய் காந்திய தேசமான இந்திய தேசத்திற்கு எதிராக நீரின்றி, உணவின்றி பட்டினியால் உயிர் துறந்த ஒரு மாவீரன்தான் தியாக தீபம் திலீபன்.

1963ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 29ஆம் திகதி ஊரெழு மண்ணில் பிறந்த திலீபனின் இயற்பெயர் இராசையா பார்த்தீபன். மருத்துவபீட மாணவனாக இருந்த 1983 காலப்பகுதியில் தன்னை விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இணைத்துக்கொண்டு "திலீபன்" என்னும் பெயரை தனதாக்கிக்கொண்டவர். போர்ப்பயிற்சிகளை நிறைவு செய்து வெளிவந்து வலிகாமத்தின் ஒரு பகுதியில் அரசியல் பணிகளில் ஈடுபட்டு வந்தநிலையில் விடுதலைப்புலிகளின் தலைமைப்பீடம் அவரை யாழ் அரசியல்த்துறைப் பொறுப்பாளராக 1985ஆம் ஆண்டில் நியமித்தது.

இவ்வாறான நிலையில்தான் 1987 இல் இந்திய இராணுவம் அமைதிப்படை என்ற பெயரில் தமிழீழ மண்ணில் கால்பதித்தது. தன்னினம் பகைவனால் அழிக்கப்பட்டு, இந்திய வல்லாதிக்க அரசின் கூட்டுச்சதிக்கு இலக்காகி சித்திரவதைக்கு உள்ளாக்கப்படுவதைக் கண்ட திலீபன் தான் உயிரிலும் மேலாக நேசித்த மக்களின் விடியலுக்காக மகாத்மா காந்தி இவ்வுலகிற்கு விட்டுச் சென்ற போராட்ட வழிமுறையான சாகும்வரையில் உண்ணா விரதம் என்ற அகிம்சை வழி ஆயுதத்தை கையில் எடுத்தார். அகிம்சையின் தாய் வீடான இந்திய தேசத்திடமே திலீபன் ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து உண்ணாவிரத அறப்போரைத் தொடுத்தார்.

1987 செப்டம்பர் 15ஆம் திகதி நல்லைக் கந்தனின் முன்றிலிலே மீளக் குடியமர்த்தல் என்ற பெயரில் வடக்கிலும் கிழக்கிலும் புதிதாக திட்டமிடப்படும் சிங்களக் குடியேற்றம் தடுத்து நிறுத்தப்பட வேண்டும், சிறைச் சாலையிலும் தடுப்பு முகாமிலும் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ்க் கைதிகள் யாவரும் விடுவிக்கப்பட வேண்டும், அவசரகாலச் சட்டம் முற்றாக நீக்கப்பட வேண்டும், ஊர்க்காவல் படைக்கு வழங்கப்பட்ட ஆயுதம் யாவும் மீளப்பெறப்பட வேண்டும், தமிழ்ப் பிரதேசத்தில் புதிதாக பொலிஸ் நிலையங்கள் திறக்கப்படும் முயற்சிகள் முற்றாகக் கைவிடப்பட வேண்டும் என்ற 5 கோரிக்கைகளை முன்வைத்து தனது சாகும் வரையிலான உண்ணாநிலைப் போராட்டத்தை ஆரம்பித்தார்.



திலீபனின் உண்ணாவிரத நாட்கள் கடந்தோடிய போதும் அந்தக் கோரிக்கைகள் எதுவும் காந்தி தேசத்தினால் நிறைவேற்றப்படவில்லை. உடல் வலிமை குன்றிய போதிலும் திலீபனின் மனவலிமை வானளவு உயர்ந்து நின்றது. ஆனால் காந்தி தேசம் தமிழருக்கு பெரும் துரோகம் இழைத்தது. 1987ஆம் ஆண்டு செப்டம்பர் 26ஆம் திகதி சனிக்கிழமை அன்று, தியாகப்பயணத்தின் பன்னிரெண்டாவது நாள், சரியாகக் காலை 10.48 மணிக்கு திலீபன் உயிர் பிரிந்தது. அமைதிப் படை என்ற போர்வையில் எமது இனத்தை அழிக்க வந்த இந்திய வல்லாதிக்க அரசின் முகத்திரையைக் கிழித்தெறிந்த காந்தி தேசத்தின் முகத்தில் கரி பூசிய திலீபன் அறவழிப் போரிற்கு புது இலக்கணம் வகுத்தார்.

அன்றிலிருந்து இன்றுவரை தியாக தீபம் திலீபனின் நினைவேந்தல் நிகழ்வு ஒவ்வொரு வருடமும் செப்டம்பர் 15ஆம் திகதி முதல் 26 ஆம் திகதி வரையிலான 12 நாட்கள் தமிழர் தேசம் மற்றும் தமிழர் வாழும் புலம் பெயர்தேசமெங்கும் உணர்வு பூர்வமாக அனுஸ்டிக்கப்பட்டு வருகின்றது. இவ்வாறான நிலையில்தான் தமிழர் தேசத்திற்கும் தமிழ் மக்களுக்கும் சொந்தமான திலீபனைத்தான் தமது தனியுரிமையாக, தனிச் சொத்தாக சொந்தம் கொண்டாடி தமிழ் தேசிய மக்கள் முன்னணி செய்து வந்த அரசியல் இம்முறை தமிழ் மக்களினது கடும் வெறுப்புக்கும் கண்டனத்திற்கும் விமர்சனத்திற்கும் உள்ளாகியுள்ளது.

வழக்கம் போலவே இம்முறையும் கடந்த 15 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் தியாக தீபம் திலீபனின் நினைவேந்தல் நிகழ்வுகள் நல்லூர் பின் வீதியில் அமைந்துள்ள தியாக தீபத்தின் நினைவிடத்தில் ஆரம்பமாகின. இதனையடுத்து தினமும் பெருமளவிலான மக்கள், மதத் தலைவர்கள், அரசியல் கட்சியினர் என வேறுபாடின்றி சென்று அஞ்சலி செலுத்தி வருகின்றனர். இவ்வாறான நிலையில்தான் கடந்த 17 ஆம் திகதி மாலை கடற்தொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் மற்றும் தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர்கள் தியாக தீபத்திற்கு அஞ்சலி செலுத்த சென்று இருந்தனர். அதன் போது, அங்கிருந்த தமிழ் தேசிய மக்கள் முன்னணியினர் அமைச்சரை அஞ்சலி செலுத்த அனுமதிக்க மாட்டோம் எனத் தடுத்து நிறுத்தி முரண்பட்டுள்ளனர். அமைச்சரையும் அவரது குழுவினரையும் திருப்பி அனுப்பியுள்ளனர்.

தமிழ் தேசத்திற்காக, தமிழ் மக்களுக்காகா உயிர் நீத்த தியாக தீபம் திலீபனுக்கு அஞ்சலி செலுத்த வந்த அமைச்சர் அடங்கிய குழுவினரை அதிலும் அவர்கள் தமிழர்களாகவும் இருக்கும் நிலையில் அவர்களை அஞ்சலி செலுத்த விடாது தடுக்க, திருப்பியனுப்ப தமிழ் தேசிய மக்கள் முன்னணியினருக்கு என்ன உரிமையுள்ளதென்பதே இன்று தமிழர் தேசத்தில் எழுந்துள்ள கேள்வி. திலீபன் அனைத்து தமிழர்களுக்கும் சொந்தமானவனாக இருக்கையில் திலீபனை உரிமை கொண்டாட தமிழ் தேசிய மக்கள் முன்னணியினர் யார்? இவர்களுக்கு அந்த உரிமையை கொடுத்தது யார்? இவர்களுக்கும் திலீபனுக்கும் என்ன தொடர்பு? திலீபனுக்கு அஞ்சலி செலுத்த யார் வரலாம் யார் வரக்கூடாது என்பதனை தீர்மானிக்க இவர்கள் யார்? என்பதே தமிழ் மக்கள் மத்தியில் எழுந்துள்ள கேள்விகள்.

திலீபனின் நினைவேந்தலைபொறுத்த வரையில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியினர் திலீபனை உரிமை கொண்டாடி அசிங்க அரசியல். அடாவடி அரசியல் செய்கின்றனர் என்பதே உண்மை. தமிழ் தேசியக்கூட்டமைப்பினரே திலீபன் நினைவுத்தூபியை நிர்மாணித்து பராமரித்தவர்கள். ஆனால் வீட்டிற்குள் ஒட்டகம் புகுந்து போல் புகுந்த தமிழ் தேசிய மக்கள் முன்னணியினர் இன்று அங்குள்ளவர்களை எல்லாம் விரட்டிவிட்டு திலீபனின் நினைவுத்தூபி இடத்தை சர்வாதிகாரமாக தமது கட்டுப் பாட்டுக்குள் வைத்துக் கொண்டு தமிழ் தேசத்தை மீட்க வந்தவர்கள் போல் காட்டி அரசியல் செய்கின்றனர். இதுதான் இன்று தமிழ் மக்களை தமிழ் தேசிய மக்கள் முன்னணியினர் மீது விசனமும் வெறுப்பும் கொள்ள வைத்துள்ளது.

அமைச்சரும் அவரது குழுவினரும் தியாகி திலீபனுக்கு அஞ்சலி செலுத்தவிடாது தடுக்கப்பட்டமை மிகவும் மோசமான செயல். ஏனெனில் தியாகி திலீபன் நினைவிடம் என்பது ஒரு பொது இடம் அங்கு ஏதிரிகளுக்கு கூட நினைவேந்தல் செய்ய உரிமை உண்டு. இந்த உரிமையை தடுப்பதற்கு தமிழ் தேசிய மக்கள் முன்னணி யினருக்கு எந்த உரிமையும் இல்லை. அரசாங்கத்தை எதிர்க்கின்ற களம் தியாகதீபம் திலீபனது நினைவேந்தல் களம் அல்ல.தியாகி திலீபனின் நினைவிடத்தை தமிழ் தேசிய மக்கள் முன்னணியினர் சர்வாதிகாரமாக தமது கட்டுப் பாட்டுக்குள் வைத்திருப்பதனால் ஏனைய தமிழ் தேசிய கட்சிகள்கூட திலீபனுக்கு அஞ்சலி செலுத்த அங்கு சென்றால் தாமும் அவமானப்படுத்தப்படுவோம், திருப்பி அனுப்பப்படுவோம் என்ற அச்சம் காரணமாக செல்லத் தயங்குகின்றனர். எனவே தமிழ் தேசிய மக்கள் முன்னணியினர் திருந்த வேண்டும் அல்லது திருத்தப்படுவார்கள் என்றவாறாக மக்கள் தமது விசனத்தை வெளிப்படுத்துகின்றனர்.

யாரும் யாரையும் அஞ்சலிக்கலாம். அதுதான் மனித மாண்பு. திலீபன் போராடிய காலத்தில் அவருக்கு எதிராக நின்ற பலர் கூட திலீபனின் தியாகத்தை மதித்து இன்று நினைவேந்தல்களில் பங்கேற்கின்றனர். ஒரு மாவீரனின் தியாகியின் நினைவேந்தலை வாக்குக் கணக்குப் பொருட்டு அரசியல் ஆக்கிரமிப்பு செய்வது ஒருபோதும் மன்னிக்க முடியாத குற்றம். இது மனித மாண்புகளை மீறிய காட்டுமிராண்டித்தனமே தவிர வேறில்லை. தமிழ் மக்களின் இனமான உணர்வுகளை, போராளிகளின் தூய்மையான போராட்டத்தை அறியாதவரல்ல அமைச்சர் சந்திரசேகர், திலீபன் போன்ற தமிழ் தேசிய இனத்தின் உயர்ந்த நோக்கத்திற்காக தமிழ் மக்களுக்காக தன்னுயிரை ஆகுதியாக்கியவரின் நினைவிடத்திற்கு அஞ்சலி செலுத்த வந்த அவரை அஞ்சலி செலுத்த விடாது தமிழ் தேசிய மக்கள் முன்னணியினர் முட்டாள்கள் போன்று செயற்பட்டுள்ளனர். அமைச்சர் அரசியல் நோக்கில் அங்கு வந்திருந்தால் கூட அதுபற்றி தமிழ் தேசிய மக்கள் முன்னணியினர் கவலைப்படத் தேவை யில்லை. ஏனெனில் இவர்களும் தமிழ் தேசிய அரசியல் ஆதாயத்திற்காகத்தான் தியாக தீபம் திலீபனை உரிமை கொண்டாடுகின்றனர்.

தியாகி திலீபனுக்கு அஞ்சலி செலுத்த நினைவிடத்திற்கு வந்த போதும் இதேபோன்றே செம்மணி மனித புதைகுழிப்பகுதிக்கு அஞ்சலி செலுத்த வந்தபோதும் அமைச்சர் சந்திரசேகரும் அவரது எம்.பி.க்கள் குழுவினரும் விரட்டப்பட்டுள்ளனர். இவ்வாறு விரட்டியவர்கள் இதன் மூலம் சாதிக்க நினைப்பது என்ன? செம்மணிக்கு வந்த அமைச்சரை அஞ்சலி செலுத்த விடாது விரட்டி விட்டு யாழ்ப்பாணம் வந்த ஜனாதிபதி செம்மணிக்கு வரவில்லையென ஒப்பாரி வைக்கின்றனர். ஜனாதிபதி இனவாதி என்கின்றனர். இது மிகவும் இழிநிலையான அரசியல். தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் மீது தமிழ் மக்களுக்கு மிகுந்த மரியாதையுண்டு. அதனால்தான் ஒவ்வொரு முறையும் அவரை மக்கள் பாராளுமன்றத்துக்கு தேர்ந்தெடுக்கின்றனர். ஆனால் திலீபன் நினைவேந்தல் விடயத்தில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியினர் நடந்து கொண்ட விதம் அருவருக்கத்தக்கது. இவ்வாறான தமது அடாவடி. அசிங்க அரசியலை இவர்கள் மாற்றிக்கொள்ளாது விட்டால் அடுத்த தேர்தலில் மக்கள் தமது தெரிவை மாற்றிக் கொள்வார்கள்.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# தியாக தீபம் திலீபனின் ஊர்தி பவனி வெள்ளிக்கிழமை மன்னாரைச் சென்றடைந்தது



(19-09-2025)

தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் இளைஞர் அணியின் ஏற்பாட்டில் தியாக தீபம் திலீபனின் 38 ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு "திலீபன் வழியில் வருகிறோம்" என்று முன்னெடுக்கப்படுகின்ற ஊர்தி பவனியானது 19ம் திகதி அன்று வெள்ளிக்கிழமை காலை மன்னார் நகர பகுதியை சென்றடைந்தது.

தியாக தீபம் தீலீபனிம் திருவுருவப்படம் தாங்கிய ஊர்தி கடந்த ஒரு வாரகாலமாக தமிழர் தாயக பகுதிகளில் அஞ்சலிக்காக சென்று வருகின்ற நிலையில் மன்னார் மக்களின் அஞ்சலிக்காக வெள்ளிக்கிழமை அன்றையதினம் சென்றது.




இதன்போது பொது மக்கள் அருட்தந்தையர்கள் இணைந்து அஞ்சலி செலுத்தியிருந்தனர்.

மன்னார் நகர் பிரதான சுற்றுவட்ட பகுதியில் பொது மக்களின் அஞ்சலிக்காக நிறுத்தப்பட்டதுடன் அதனை தொடர்ந்து மன்னார் நகர பேருந்து தரிப்பிடத்திலும் அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெற்றது.

# இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளராக ம.சசிகுமார் பதவியேற்பு!

21.09.2025 ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பிரதிநிதிகள் சபைக் கூட்டத்தில் சங்கத்தின் பொதுச் செயலாளராக யாழ்ப்பாணம் நீர்வேலியைச் சேர்ந்த திரு. ம. சசிகுமார் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டதோடு, தலைவராக மட்டக்களப்பு களுவாச்சிக் குடியைச் சேர்ந்த திரு.சி. சசிகுமார் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டார்.

நிதிச் செயலாளராக வடமராட்சியைச் சேர்ந்த திரு. கி. இந்திரனும் தெரிவு செய்யப்பட்டதோடு, துணைத்தலைவர்களாக திருகோணமலையைச் சேர்ந்த திரு. இரா. சச்சிதானந்தம், மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த திரு. ஏ. அன்ரன் சேவியர், யாழ்ப்பாண வலயத்தைச் சேர்ந்த திருமதி. சசிகலா ஜெயராஜன், யாழ்ப்பாண வலயத்தைச் சேர்ந்த திருமதி. அமலராஜ் புனிதசீலி ஆகியோரும்,

துணைப் பொதுச் செயலாளர்களாக மட்டக்களப்பைச் சேர்ந்த திரு. செ. சிவநடேஸ், தீவக வலயத்தைச் திரு. த. தயாபரன், மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த திரு. ஈ.என்.ஜே.ஜே. பிகிறாடோ ஆகியோரும், துணை நிதிச் செயலாளர்களாக அம்பாறையைச் சேர்ந்த திரு. க. சந்திரகாசன், மட்டக்களப்பைச் சேர்ந்த திருமதி. சுந்தரலிங்கம் உமாபிரியா ஆகியோரும், கல்வி கலாச்சார செயலாளராக தென்மராட்சி வலய திரு. நா. கேதீஸ்வரனும் பத்திரிகைச் செயலாளராக புத்தளம் மாவட்டத்தைச். சேர்ந்த திரு. தெ. சுதர்சனும், பிரசாரச் செயலாளராக மலையகத்தைச் சேர்ந்த திரு. அ. பாலசிங்கமும் தெரிவு செய்யப்பட்டு சபை ஏகமனதாக ஏற்கொண்டது.

தொடர்ந்து சங்கத்தின் ஆலோசகர்களான க. நல்லதம்பி அவர்களினதும் திரு. சரா. புவனேஸ்வரன் அவர்களினதும் சிறப்புரைகள் இடம்பெற்றன.

அடுத்து சங்கத்தின் பணிகளை செம்மையாக மேற்கொண்டு ஓய்வுபெற்ற உறுப்பினர்களையும், பணிமேலோங்கி பதவி உயர்வு பெற்ற உறுப்பினர்களுக்குமான கௌரவிப்பு நிகழ்வு இடம்பெற்றது.

இக்கௌரவிப்பில் முன்னைநாள் துணைத் தலைவர் செல்வி. வளர்மதி சங்கரலிங்கம் அவர்களும், முன்னைநாள் மன்னார் மாவட்டச் செயலாளர் திரு. மரியான் ஜெரார்ட் டயஸ் அவர்களும், முன்னைநாள் பதில் பொதுச் செயலாளரும் பிரதிக் கல்விப் பணிப்பாளராக பதவி உயர்வு பெற்ற திரு. பி.என். சுதர்சன் அவர்களும், முன்னைநாள் பதில் பொதுச் செயலாளரும் விரிவுரையாளராக பதவி உயர்வு பெற்ற திரு. செ. சிவபாலசுந்தர் அவர்களும் கௌரவிக்கப்பட்டனர். தொடர்ந்து புதிய தாய்ச்சங்க நிர்வாக உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.



கிழக்கு மாகாணச் செயலாளராக திரு. த. ஹரிகாலனும் வடமாகாணச் செயலாளராக திரு. வி. ஜெயருபனும், ஏனைய மாகாணங்களுக்கான செயலாளர்களும், மாவட்டச் செயலாளர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

சங்கத்தின் ஆலோசகர்களாக திருமதி. ஈ.ஜெ. மகேந்திரா, திரு. க. நல்லதம்பி, திரு. சரா. புவனேஸ்வரன். ஆகியோர் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

மேலாக பொதுச் சபையின் அங்கீகாரத்தோடு ஒன்பது பேர் கொண்ட ஆலோசனைச் சபையும் உருவாக்கப்பட்டது.

அதில் சங்கத்தின் ஆலோசகர்கள் உள்ளடங்கலாக யாழ் பல்கலைக்கழக பேராசிரியர். நவநீதகிருஷ்ணன் கெங்காதரன் அவர்களும், முன்னைநாள் துணைப் பொதுச் செயலாளரும் பிரதிக் கல்விப் பணிப்பாளருமான திரு. பொ. அருணகிரிநாதன் அவர்களும், முன்னாள் கல்விப் பணிப்பாளர் திரு. யோ. ரவீந்திரன் அவர்களும், பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. பி.என். சுதர்ஷன் அவர்களும், விரிவுரையாளர் செ. சிவபாலசுந்தர் அவர்களும், முன்னாள் மன்னார் மாவட்டச் செயலாளர் திரு. மரியான் ஜெரால்ட் டயஸ் அவர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

# யாழ்ப்பாணத்தில் ஊடகவியலாளரை அச்சுறுத்தியவருக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு தேசிய மக்கள் சக்தியைச் சார்ந்த ரஜீவன் எம்.பி கோரிக்கை!

சுயாதீன ஊடகவியலாளர் சுமித்தி மீதான அச்சுறுத்தலுக்கு உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு கோரி நாடாளுமன்ற உறுப்பினர் ரஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி இன்றையதினம் யாழ்ப்பாண மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபருக்கு கடிதம் ஒன்றினை அனுப்பியுள்ளார்.


பாராளுமன்றம்
Parliament
Rajeevan Jeyachandramoorthy
Member of Parliament
23.09.2025

The Deputy Inspector General of Police,
Jaffna

Subject: Request for Immediate Action on Threats Against Journalist Sumithi Thankarasa.

Dear Sir,

As you are aware, journalists play a vital role in strengthening democracy by ensuring that truth and facts reach the people. It is our collective responsibility to safeguard their independence and protect them from intimidation, threats, or any form of violence that may hinder their professional duties.

Therefore, I kindly urge you to take immediate and appropriate action to identify the perpetrators of this threat and ensure that justice is served. At the same time, I request that adequate measures be taken to guarantee the security of journalists in Jaffna, enabling them to carry out their responsibilities without fear.

Your prompt intervention in this matter will help reinforce public trust and ensure the protection of media freedom in our society.

Thank you.

Yours faithfully,
Rajeevan Jeyachandramoorthy,
Member of Parliament,
Jaffna Electoral District.

RAJEEVAN JEYACHANDRAMOORTHY
Member of Parliament

அந்த கடிதத்தில் அவர் குறிப்பிட்டுள்ளதாவது, நல்லூரில் சமீபத்தில் நடந்த ஒரு தீவிரமான சம்பவத்தை உங்கள் கவனத்திற்குக் கொண்டுவருவதற்காக நான் இதை எழுதுகிறேன். அங்கு பத்திரிகையாளர் சுமித்தி தங்கராசா அடையாளம் தெரியாத நபர்களால் கடுமையாக அச்சுறுத்தப்பட்டார்.

உண்மைகள் மக்களைச் சென்றடைவதை உறுதி செய்வதன் மூலம் ஜனநாயகத்தை வலுப்படுத்துவதில் பத்திரிகையாளர்கள் முக்கிய பங்கு வகிக்கின்றனர். அவர்களின் சுதந்திரத்தைப் பாதுகாப்பதும், அவர்களின் தொழில்முறை கடமைகளுக்கு இடையூறாக இருக்கும் மிரட்டல், அச்சுறுத்தல்கள் அல்லது எந்தவொரு வன்முறையிலிருந்தும் அவர்களைப் பாதுகாப்பதும் நமது கூட்டுப் பொறுப்பாகும்.



எனவே, இந்த அச்சுறுத்தலை ஏற்படுத்தியவர்களை உடனடியாகவும், தகுந்த நடவடிக்கை எடுத்து, நீதி நிலைநாட்டப் படுவதை உறுதி செய்யுமாறு நான் கேட்டுக்கொள்கிறேன். அதே நேரத்தில், யாழ்ப்பாணத்தில் உள்ள ஊடகவியலாளர்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கு போதுமான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்றும், அவர்கள் தங்கள் பொறுப்புகளை அச்சமின்றி நிறைவேற்ற முடியும் என்றும் நான் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த விடயத்தில் உங்கள் உடனடி தலையீடு பொதுமக்களின் நம்பிக்கையை வலுப்படுத்தவும், நமது சமூகத்தில் ஊடக சுதந்திரத்தின் பாதுகாப்பை உறுதி செய்யவும் உதவும் என குறிப்பிட்டுள்ளார்.

# மக்களுக்கு இடையூறு இல்லாமல் விளம்பரங்களைக் காட்சிப்படுத்தும் ஏற்பாடு – செய்துள்ள வலிகாமம் மேற்கு பிரதேச சபை முன்மாதிரி!




தனியார் நிறுவனங்களின் விளம்பரங்கள், மரண அறிவித்தல்கள், கோவில்களின் விஞ்ஞாபனங்கள் மற்றும் பொது அறிவித்தல்கள் என்பன மக்களது வீடுகளின் மதில் சுவர்கள் பாடசாலைகளின் மதில் சுவர்கள் மற்றும் பல்வேறு நிறுவனங்களின் பதில் சுவர்களிலும் ஒட்டப்படுவதால் இவ்வாறு விளம்பரங்கள் ஒட்டப்படும் பகுதிகள் அழுக்காகின்றது மட்டுமல்லாமல் அது விசனத்துக்கும் உள்ளாகின்ற நிலைமைகள் ஏற்படுகின்றன.

மதில் சுவர்கள் இவ்வாறு அழுக்கடைவதை தடுக்கும் நோக்கில் வலிகாமம் மேற்கு பிரதேச சபையானது ஒரு முன்மாதிரியான நடவடிக்கையை எடுத்துள்ளது. அதாவது வலிகாமம் மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட 7 பொது இடங்களில் இவ்வாறான விளம்பரங்களை காட்சிப்படுத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

அந்தவகையில், சுழிபுரம் சந்தி, வழக்கம்பரை அம்மன் கோவில் அருகாமை, சித்தங்கேணி சந்தி, சங்கரத்தை சந்தி அருகாமை, வட்டுக்கோட்டை, அராலி உப அலுவலகத்துக்கு அருகாமை, அராலி ஐயனார் கோவில் அருகாமை போன்ற இடங்களில் இவ்வாறான விளம்பரங்களை காட்சிப்படுத்த வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் இந்த முன்மாதிரியான, பயனுள்ள செயற்பாட்டை மக்கள் பாராட்டி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இலங்கை செய்திகள்
Sri Lanka News



# வல்லிபுர ஆழ்வார் ஆலய பெருந்திருவிழா 2025 சற்றுமுன் கொடியேற்றதுடன் ஆரம்பம்!

பு. கஜிந்தன்

வடமராட்சி வல்லிபுர ஆழ்வார் ஆலய பெருந்திருவிழா 2025 ஆனது ஞாயிற்றுக்கிழமை 21ம் திகதி அன்று கொடியேற்றதுடன் ஆரம்பமாகியது.

யாழ்ப்பாணம் - வடமராட்சி வல்லிபுர ஆழ்வார் ஆலய வருடாந்த பெருந்திருவிழாவானது சற்றுமுன் விசேட பூசைகள் இடம்பெற்று கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.



வல்லிபுர ஆழ்வார் ஆலய பிரதம குரு கணபதீஸ்வரக்குருக்கள் தலமையிலான குருமார் திருவிழா கிரியைகளை மேற்கொண்டதுடன் சுப வேளையில் கொடியேற்றும் இடம்பெற்று சிறப்பு பூசைகள் தற்போது இடம் பெற்றுவருகின்றன.

திருவிழாவிற்கான சுகாதார வசதிகளையும் ஏனைய பணிகளையும் பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகமும் பருத்தித்துறை பிரதேச சபையும், வடமராட்சி வடக்கு பிரதேச செயலகமும் வழங்குகின்றது. பருத்தித்துறை பொலிஸ் நிலையம் மக்களுக்கான பாதுகாப்பு நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளது.

# வீதியோரங்களில் கட்டப்படுகின்ற கால்நடைகளுக்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கவும் — வலி. மேற்கு பிரதேச சபையில் வலியுறுத்து!



வீதியோரங்களில் கட்டப்படுகின்ற கால்நடைகளுக்கும், கட்டாக்காலியாக வீதிகளில் திரிகின்ற கால்நடைகளுக்கும் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் உறுப்பினர் ஜெ.துவாரகா சபையில் கோரிக்கை முன்வைத்தார்.

வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் மாதாந்த அமர்வு 19ம் திகதி அன்றையதினம் தவிசாளர் ச.ஜயந்தன் தலைமையில் நடைபெற்றது. இதன்போது அவர் இந்த கோரிக்கையை முன்வைத்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், கால்நடைகளை அதன் உரிமையாளர்கள் நீண்ட கயிறுகளில் வீதியோரங்களில் கட்டுகின்றனர். இதனால் அந்த கால்நடைகள் ஒருபுறத்திலிருந்து மறுபுறம் செல்லும்போது அந்தக் கயிறு வாகனங்களில் சிக்குவதாலும், கால்நடைகள் குறித்து வருவதாலும் விபத்துக்கள் ஏற்படுகின்றன.

சில தினங்களுக்கு முன்னர் வட்டுக்கோட்டையில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி பயணித்துக் கொண்டிருந்தபோது செட்டியார் மடம் சந்தியிலும் இவ்வாறு ஒரு வாகனம் மாடு ஒன்றின் கயிற்றில் சிக்கியது. அது பெரிய வாகனமாக இருந்ததால் ஆபத்துகள் ஏற்படவில்லை. இதுவே மோட்டார் சைக்கிள் அல்லது துவிச்சக்கர வண்டியாக இருந்திருந்தால் அங்கே பாரிய விபத்து ஏற்பட்டிருக்கும்.



இதுபோல கட்டாக்காலி நாய்கள் வீதியில் செல்வதாலும் இவ்வாறான விபத்துக்கள் ஏற்படக்கூடிய சந்தர்ப்பங்கள் அதிகமாக உள்ளன. எனவே இதற்கான விழிப்புணர்வு நடவடிக்கை உடனடியாக மேற்கொள்ளப்பட வேண்டும் என அவர் வலியுறுத்தி உள்ளார்.

# வட்டக்கச்சி மாயவனூரில் அமைந்துள்ள புழுதியாறு குளத்தில் நடைபெறும் ஏற்று நீர்ப்பாசனத் திட்டப்பணிகளை பார்வையிட்டார் சிறீதரன் எம்.பி!

வட்டக்கச்சி மாயவனூரில் அமைந்துள்ள புழுதியாறு குளத்தினுடைய ஏற்று நீர்ப்பாசனத் திட்டத்தின் பணிகளை நாடாளுமன்ற உறுப்பினரும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற குழுவின் தலைவருமான சிவஞானம் சிறீதரன் அவர்கள் இன்றைய தினம் சென்று பார்வையிட்டார்.



வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் அமரர் சு. பசுபதிப் பிள்ளை அவர்களின் பெரும் முயற்சியினால் இந்த ஏற்று நீர்ப்பாசனத் திட்டம் முதலில் உருவாக்கப்பட்டது பிறகு அதற்கான மின்சார இணைப்புகளில் ஏற்பட்ட இடர்பாடு காரணமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த குறித்த பணியானது மாகாண சபையின் குறித்தொதுக்கப்பட்ட நிதியில் சுமார் 12 மில்லியன் ரூபாய் செலவில் சூரிய மின்கல மூலம் இயங்கும் நீர் பம்பிகள் மூலம் விவசாயிகளுக்கான உடனடி நீர் வழங்கும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது கிளிநொச்சி மாவட்ட நீர்ப்பாசனத் திணைக்களத்தின் ஊடாக இப்பணிகள் நடைபெற்றுவருகிறது.

நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் அவர்களுடன் கிளிநொச்சி கிழக்கு நீர்ப்பாசனத் திணைக்களத்தின் பணிப்பாளர் எந்திரி பிரகாஷ் கைலாயபிள்ளை கரைச்சி பிரதேச சபையின் உறுப்பினர் பொன்காந்தன்மாயனூர் கமக்கார அமைப்பின் தலைவர் ஜெகன் மற்றும் கமக்கார அமைப்பின் உறுப்பினர்கள் ஆகியோர் சென்று குறித்த பணிகளை பார்வையிட்டிருந்தனர்.



# பொது விடயங்களை உரிய முறையில் தெரியப்படுத்துவதில்லை என மானிப்பாய் பிரதேச சபையில் குற்றச்சாட்டு!

பொது விடயங்களை உரிய முறையில் தமக்கு தெரியப்படுத்தப் படுவதும் இலலை, உரிய முறையில் அழைப்பு விடுப்பதும் இல்லை என மானிப்பாய் பிரதேச சபையின் உறுப்பினர்கள் பலரும் குற்றம் சாட்டியுள்ளனர்.

19ம் திகதி வெள்ளிக்கிழமையன்று சபையின் தவிசாளர் ஜெசீதன் தலைமையில் நடைபெற்ற சபை அமர்வின் போது அவர்கள் இந்த விடயத்தை சுட்டிக் காட்டியுள்ளனர். இது குறித்து தமிழரசு கட்சியின் உறுப்பினர் சு.வாகீசன் கருத்து தெரிவிக்கையில், பிரதேச சபை சார்ந்த விடயங்கள், அல்லது போட்டிகள் ஏதாவது நடைபெற உள்ளது என்றால் எமக்கு அதனை அறிய தாருங்கள். என்னிடம் வழங்கினால் கூட நான் உரியவர்களுக்கு அனுப்பி வைப்பேன் அல்லது பிரதேச சபை உறுப்பினர்களின் குழுவில் பகிர்வேன்.

பிரதேச சபையால் ஏற்பாடு செய்த மரநடுகை நிகழ்வு தொடர்பாக தாமதமாக தெரியப்படுத்தியதால் அந்த நிகழ்வுக்கு வருகை தர முடியவில்லை என குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது. அது ஏற்றுக்கொள்ள கூடிய விடயம். எனவே எதிர்காலத்தில் இவ்வாறு செயற்படுவதை தவிர்த்தால் நல்லது என்றார்.

மேலும், நடைபெற்று முடிந்த, பிரதேச சபைகளின் உறுப்பினர்களுக்கு இடையிலான விளையாட்டு நிகழ்வுகள் தொடர்பாக தமக்குத் தெரியப்படுத்தவில்லை எனவும், அதனை தெரியப்படுத்தி இருந்தால் தாங்களும் அந்த விளையாட்டில் பங்குபற்றி இருக்கலாம் என உறுப்பினர்கள் கருத்து தெரிவித்தனர்.

TRADITIONAL CHINESE
ACUPUNCTURE THERAPY

| | |
|---|---|
| எல்லாவிமான வலிகளுக்கும் | All Pain & Aches, Arthritis |
| ஆஸ்மா, பீனிசம், ஒவ்வாமை | Asthma, Sinusitis, Rhinitis Allergies |
| மனத்தளர்ச்சி, தலைவலி | Stress, Migraine & All Types of Headaches |
| நீரிழிவு நோய், வயிற்றுவலி | Diabetes, Gastric Pain, Ulcer |
| மாதவிடதய் சம்மந்தமானவையும் | Menstruation |
| உடற்பருமன் குறைத்தல் | Weight Loss |

முதலான சகலவிதமான நோய்களுக்கும்
Mrs. K. Vasanthakumar ஐ
Acupuncturist (R.A.C)
தொடர்புகொள்ளவும்.
(416) 754-4024
5200 Finch Ave., East -- Suit #349
Scarborough, ON M1S 4Z5


ஸ்ரீ பரம்ஜோதி அம்மா பகவான்
வழிபாடும் பிரசங்கமும்
ஸ்ரீ அம்மா பகவானின் மங்களகரமானதும் ஆசிர்வாதம் நிறைந்ததுமான ஒரு அமர்வில் எங்களுடன் இணைந்து கொள்ள உங்களை வரவேற்கிறோம். தியானம் மற்றும் உங்கள் உள் உலகம் தொடர்பான போதனையுடன் வழிகாட்டப்பட்ட அமர்வு. துன்பம், வலி ஆகியவற்றைக் குணப்படுத்தவும். உங்கள் பிரார்த்தனைகளுக்கு பதில் பெறவும் எங்களுடன் இணைந்து கொள்ளுங்கள்.
மாதத்தின் ஒவ்வொரு இரண்டாவது ஞாயிற்றுக்கிழமைகளில் நடைபெறுகின்றது.
எதிர்வரும்
ஒக்டோபர் 12ம் திகதி ஞாயிற்றுக்கிழமை
காலை 11.00 தொடக்கம்
7Studios & Events
101 Lebovic Ave, Unit# F01,
Scarborough, ON M1L 0J2
Free parking
மேலதிக விபரங்களுக்கு:
(416) 660-7545 அல்லது (647) 531- 9419


GM TOURS & TRAVELS
CHIANG MAI (THAILAND), LAOS,CAMBODIA, VIETNAM, BALI (INDONESIA) & MALAYSIA
$6699
Jan 16 to Feb 07, 2026
23 days tour!
6 countries
All Tours are All Inclusive
(Ticket, Breakfast, Lunch, Dinner, Transportation and Entering Fees)
* Travel Insurance Not Included * Visa for the countries not included
IT'S TIME TO TRAVEL
DESTINATIONS COVERD
Chiang Mai, Chiang Rai, Siem Reap, Phnom Penh, Laos,Hanoi, Halong Bay, Sapa, Bali, Malaysia
Call Or Whatsapp
BALAN: 647-657-0848
atoz_balan@yahoo.com
Book Before NOV 20th - 2025
Deposite - 70%
The tours will be departuring from and arriving at Toronto Pearson Airport

# எதிர்கால சந்ததியினருக்குப் பாதுகாப்பான உலகை உருவாக்க முழு மனதுடன் உறுதியெடுப்போம்...

## ஐக்கிய நாடுகள் சபையில இலங்கை ,ஜனாதிபதி அநுர குமார திசநாயக்க உலகத் தலைவர்கள் மத்தியில் உரையாற்றும் போது அழைப்பு விடுத்தார்



எதிர்கால சந்ததியினருக்கு பாதுகாப்பான உலகை உருவாக்குவதற்கு முழு மனதுடன் அர்ப்பணிப்போம் என ஐக்கிய நாடுகள் சபையின் 80 ஆவது பொதுச் சபை அமர்வில் உரையாற்றிய இலங்கையின் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க, உலகத் தலைவர்களுக்கு அழைப்பு விடுத்தார்.

மேற்படி தனது உரையின் போது, ஒருவருக்கொருவர் எதிராகச் செல்வதற்குப் பதிலாக, ஒருவருக்கொருவர் கைகோர்த்துச் செல்லும் பயணத்தை நாம் மேற்கொள்ள வேண்டும் என்றும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.
ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் 80 ஆவது அமர்வு, நியூயோர் நகரில் ஐக்கிய நாடுகள் சபை தலைமையகத்தில் ஆரம்பமானதுடன், இலங்கை நேரப்படி 25ம் திகதி காலை ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க அமர்வில் உரையாற்றினார்.
மேற்படி தனது உரையில் காசா பகுதியில் தொடர்ந்து இடம்பெறும் கொடூரமான பேரழிவு குறித்து கவலை தெரிவித்த ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க, ஐக்கிய நாடுகள் சபை மற்றும் ஏனைய அனைத்து தரப்பினரின் இணக்கப்பாட்டுடன் இரு தரப்பும் உடனடியாக போர்நிறுத்தத்தில் ஈடுபடுவதுடன், அனைத்து மனிதாபிமான உதவிகளையும் தடையின்றி வழங்கவும், அனைத்து தரப்பிலிருந்தும் பணயக்கைதிகளை விடுவிக்க குரல் எழுப்புவதாகவும் வலியுறுத்தினார். இந்த கொடூரமான கொலைகளை நிறுத்துவதற்கு வலுவான அழுத்தம் கொடுக்கப்பட வேண்டும் எனவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

ஆயுதங்கள் மூலம் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குப் பதிலாக, மனித நாகரிகத்தின் மதிப்புகள் மூலம் பிரச்சினைகளைத் தீர்க்கும் திறனிற்கு அனைவரும் செல்ல வேண்டும் என்று ஜனாதிபதி வலியுறுத்தினார்.
மேலும், பல உலகளாவிய பிரச்சினைகளை உருவாக்கியுள்ள வறுமை குறித்து தனது உரையில் சிறப்பு கவனம் செலுத்திய ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க, சமத்துவமின்மை மற்றும் வறுமையை உலகளாவிய பேரழிவாகக் கருதி அவற்றை நிவர்த்தி செய்ய வேண்டும் என்றும் தெரிவித்தார். கூறினார்.

உலகெங்கிலும் உள்ள மில்லியன் கணக்கான மக்களைப் பாதிக்கும் ஒரு சிக்கலான சவாலாக மாறியுள்ள உலக-ளாவிய போதைப்பொருள் பிரச்சினையை ஒழிக்க இலங்கை எடுத்துள்ள சாதகமான நடவடிக்கைகளையும் இங்கு எடுத்துரைத்த ஜனாதிபதி, உலக சுகாதாரம், உலக ஜனநாயகம், உலக அரசியல் மற்றும் உலக நல்வாழ்விற்கு சவாலாக அமைந்துள்ள போதைப்பொருள் அச்சுறுத்தலை ஒழிப்பதற்கான உலகளாவிய நிகழ்ச்சி நிரலை செயல்படுத்த உலகத் தலைவர்கள் இணைய வேண்டும் என்றும் அழைப்பு விடுத்தார்.

போதைப்பொருள் கடத்தல்காரர்களுக்கு எதிரான சட்டத்தை கடுமையாக அமுல்படுத்துவது, அவ்வாறான கடத்தல்காரர்கள் அந்தந்த நாடுகளுக்கு இடம்பெயர்வதற்கான வாய்ப்புகளை அதிகரிப்பது மற்றும் போதைக்கு அடிமையான புனர்வாழ்வு நிலையங்களை உருவாக்குவது குறித்த விடயங்கள் தொடர்பில் ஜனாதிபதி உலகத் தலைவர்களின் கவனத்திற்கு கொண்டுவந்தார்.

சமூகத்தில் பாரிய அழிவுகளையும் அவலங்களையும் ஏற்படுத்தும் ஊழல், அபிவிருத்திக்கு தடையாக இருப்பதுடன் ஜனநாயகம் மற்றும் உலக நலனுக்கு தீர்க்கமான அச்சுறுத்தல் மற்றும் வறுமைக்கும் காரணமாகின்றன என இங்கு சுட்டிக்காட்டிய ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க, ஊழலுக்கு எதிரான போராட்டம் கடினமான நடவடிக்கையாக இருந்தாலும், அடுத்த தலைமுறைக்காக இலங்கை அதை ஆரம்பித்துள்ளதுடன், ஊழலுக்கு எதிரான போராட்டம் ஒவ்வொரு நாட்டின் கலாசாரத்தின் ஒரு பகுதியாக இருக்க வேண்டும் என்றும் பரிந்துரைத்தார்.

இருளுக்கு பதிலாக ஒளியின் பாதையைத் தேர்ந்தெடுத்த இலங்கை மக்கள் இன்று " வளமான நாடு - அழகான வாழ்க்கை" என்ற நடைமுறை தொலைநோக்குப் பார்வையைச் சுற்றி ஒன்றுபட்டுள்ளனர் என்று மேலும் தெரிவித்த ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க, இந்த வரலாற்றுச் சாதனையை நனவாக்க, ஊழலற்ற நெறிமுறைமிக்க நிர்வாகம், வறுமை ஒழிப்பு, டிஜிட்டல் மயமாக்கல் மற்றும் தூய்மையான நாடு ஆகிய முக்கிய துறைகளில் அவதானம் செலுத்தியுள்ளதுடன், அதனுடன் இணைந்தவகையில் கல்வி, சுகாதாரம் ஆகியவற்றில் மிகுந்த கவனம் செலுத்தப்பட்டுள்ளதுடன், படிப்படியாக அவை அனைத்தும் வெற்றிகொள்ளப்படுவதாகவும் குறிப்பிட்டார்.

ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் 80 ஆவது அமர்வில் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க ஆற்றிய முழுமையான உரையின் ஒருபகுதி கீழே காணப்பெறுகின்றது
தலைவர் அவர்களே, சிறப்பு விருந்தினர்களே, அதிதிகளே, உலக நாடுகளிடையே நீதியான மற்றும் நீடித்த அமைதியை நிலைநாட்டிப் பேணுவதை உன்னத குறிக்கோளாகக் கொண்டு உருவாக்கப்பட்ட இந்த தனித்துவமான அமைப்பின் 80 ஆவது அமர்வின் தலைவரா-கத் தேர்ந்தெடுக்கப்பட்ட, ஐரோப்பாவின் மையப்பகுதியில் உள்ள அற்புதமான ஜெர்மனியைச் சேர்ந்த அதிமேதகு அந்தெலேனா பெயபெராக் அவர்களுக்கு எனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், உலகையே வியக்க வைக்கும் புவியியல் மற்றும் கலாசார பன்முகத்தன்மை கொண்ட நாடான கேமரூனின் முன்னாள் ஜனாதிபதி அதிமேதகு பிலிமோன் யாங் வழங்கிய தலைமைத்துவத்திற்கு இலங்கை தனது பாராட்டுகளைத் தெரிவிக்க இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக்கொள்கிறேன்.

அமைதியும் ஜனநாயகமும் நிறைந்த அழகிய உலகத்திற்காக எட்டு தசாப்தங்களாக தன்னை அர்ப்பணித்துள்ள ஒரு அமைப்பின் பல்தரப்புப் போக்கிற்கும் எதிர்காலத்திற்கும் திட்டங்கள் வகுக்கப்படும் இந்தச் சிறப்புச் சந்தர்ப்பத்தில் இலங்கையின் ஜனாதிபதி என்ற முறையில் முதல் தடவையாக இந்த கௌரவமான சபையில் உரையாற்றுவதையிட்டு நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.

இந்த உலகின் பல்வேறு நாடுகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நீங்கள் ஒவ்வொருவரும் அந்தந்த நாட்டு மக்களின் பிரதிநிதிகள். எனது நாடான இலங்கையைப் போலவே, ஏனைய எல்லா நாட்டு மக்களாலும் எங்களிடம் ஒப்படைக்கப்பட்ட வரலாற்றுப் பொறுப்பு நம் அனைவரின் தோள்களிலும் சுமத்தப்பட்டுள்ளது. நாம் எடுக்கும் ஒவ்வொரு முடிவும் இந்த உலகில் எங்கேனும் வாழும் அனைவரையும் பாதிக்கிறது. அந்த முடிவுகள் மற்றும் தீர்மானங்கள் அனைத்தும் உலகின் எதிர்கால இருப்பிற்கு ஒரு தீர்க்கமான பங்களிப்பைச் செய்கின்றன.

மனித நாகரிகத்தின் தொடக்கத்தில் இருந்து எதிர்கொள்ளும் மிகக் கடுமையான துயரமாக வறுமையை அறிமுகப்படுத்தலாம். அந்தப் பாரிய பேரழிவின் விளைவாக எழுந்த பல கடுமையான பிரச்சினைகள் நம் முன் ஒரு இருண்ட துயரத்தை உருவாக்கியுள்ளன.

இந்த சிறப்பு மாநாட்டின் கவனம் அதில் குவிய வேண்டும் என்று என் மனசாட்சி உரக்கச் சொல்கிறது. பெரும்பாலும் இவை அனைத்தும் உங்கள் மனசாட்சியை ஓரளவுக்கேனும் பாதிக்கும் என்று நான் நினைக்கிறேன்.

மதிப்பிற்குரிய பிரதிநிதிகளே, வறுமை என்பது உலகின் பெரும்பாலான நாடுகளில் பல நூற்றாண்டுகளாக அனுபவித்து வரும் ஒரு தொடர்ச்சியான மற்றும் மிகவும் வேதனையான போராட்டமாக அடையாளப்படுத்தலாம். இது பல வடிவங்களில் வரும் ஒரு பயங்கரமான எதிரி, இந்த மாநாட்டில் நாங்கள் கூடியிருக்கும் தருணத்தில் கூட, நான் உட்பட இந்த ஒவ்வொரு பிரதிநிதிகளின் நாடுகளிலும் கணிசமான எண்ணிக்கையிலான குழந்தைகள் பட்டினியால் வாடுகிறார்கள். அனைத்து பிள்ளைகளுக்கும் கல்வி கற்கும் உரிமை என்பது சர்வதேச மனித உரிமைகள் சட்டத்தால் உத்தரவாதம் அளிக்கப்பட்டு அரசியலமைப்பில் அங்கீகரிக்கப்பட்ட ஒரு அடிப்படை மனித உரிமையா-கும். ஆனால் உலகம் முழுவதும் இலட்சக்கணக்கான குழந்தைகள் ஏழ்மை மற்றும் வறுமை காரணமாக இந்த உரிமை மறுக்கப்படுகிறார்கள்.

தொழில்நுட்பம் நிறைந்ததாக பெருமை பேசும் உலகில், குழந்தைகள் பாடசாலைக் கல்வியை இழப்பது எவ்வளவு துரதிர்'டவசமானது? ஒவ்வொரு பாரிய தேசத்தையும் கட்டியெழுப்புவதற்கான அடித்தளம் கல்வி ஆகும். எதிர்கால உலகின் இருப்பை தீர்மானிக்கும் முக்கிய காரணியாகும். கல்வியில் முதலீடு செய்வதை உலக முன்னேற்றத்திற்கான முதலீடாக நாங்கள் கருதுகிறோம். பல அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் வறுமையை நிவர்த்தி செய்வதில், முன்னேற்றத்திற்கு கடன் சுமைகள் தொடர்ந்து தடையாக உள்ளன. பொதுவாக, குறைந்த வருமான நாடுகள் சுகாதாரம் அல்லது கல்வி சேவைகளை விட நிகர வட்டி செலுத்துதல்களுக்கு இரண்டு மடங்கு அதிகமான நிதியை ஒதுக்குகின்றன. பிரஜைகளாகவும் நாடுகளாகவும் நாம் கடன் பொறிகளில் சிக்கிக் கொண்டுள்ளோம். இந்த சூழ்நிலைக்கு ஒரு சாதகமான தீர்வு அவசியம். நிலைபேறான அபிவிருத்திக்கான 2030 நிகழ்ச்சி நிரல், யாரையும் கைவிடாது என்றும் முதலில் பின்தங்கியவர்களை சென்றடையவும் உறுதியளிக்கிறது.
இன்று உலகம் எதிர்கொள்ளும் மிகப்பெரிய உலகளாவிய சவாலான வறுமையை ஒழிக்கும் சவாலை நிலைபெறு அபிவிருத்திக்கான 2030 நிகழ்ச்சி நிரல் அடையாளம் கண்டுள்ளது. 1995 ஆம் ஆண்டு கோபன்ஹேகனில் நடைபெற்ற சமூக அபிவிருத்திக்கான உலக உச்சி மாநாட்டில் எடுக்கப்பட்ட ஒரு முக்கியமான முடிவை உங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். இருப்பினும், எதிர்பாராத யுத்தங்கள், அரசியல் கொந்தளிப்புகள் மற்றும் உலகமே புயலில் சிக்கிய கோவிட் தொற்றுநோய் ஆகியவை இலட்சிய நிகழ்ச்சி நிரலை சீர்குலைத்துள்ளன. எனவே, ஏழை பணக்காரர் இடைவெளி மற்றும் வறுமையை ஒரு உலகளாவிய பேரழிவாக நாம் கருத வேண்டும்.

மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, கௌரவ விருந்தினர்களே, இந்த அற்புதமான உலகை சீர்குலைத்து, குழப்பும் புதிய பிரச்சனையாக போதைப்பொருள் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக் குழுக்களை அடையாளம் காண முடியும். ஐக்கிய நாடுகளின் போதைப்பொருள் குற்றங்கள் தொடர்பான அலு-வலகம் அதன் 2025 உலக போதைப்பொருள் அறிக்கையில் கூட இதை உறுதிப்படுத்தியுள்ளது. உலகளாவிய போதைப்பொருள் பிரச்சனை உலகெங்கிலும் உள்ள மில்லியன் கணக்கான மக்களை பாதிக்கும் ஒரு சிக்கலான சவாலாக மாறியுள்ளது. நாளுக்கு நாள், போதைப்பொருள் மற்றும் தொடர்புடைய பொருட்கள் உலகசந்தையை வே-கமாக ஆக்கிரமித்துள்ளன. போதைப்பொருள் வர்த்தகமும் அதன் மூலம் செயல்படும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றமும் பல உலக நெருக்கடிகளுக்கு வழி வகுத்துள்ளன.

இவற்றில் ஈடுபட்டுள்ள குழுக்கள் நாடுகளை இரையாக மாற்றுகின்றன. இந்த கொள்ளைநோய் உலக சுகாதாரம், உலக ஜனநாயகம், உலக அரசியல் மற்றும் இறுதியாக உலக நல்வாழ்வுக்கு எதிரான ஒரு பெரிய போக்காக மாறியுள்ளது. இலங்கையில் இந்த பெரும் கொள்ளைநோயை ஒழிப்பதற்கான ஒரு சாத்தியமான திட்டத்தை நாங்கள் செயல்படுத்தி வருகிறோம், மேலும் இந்த அச்சுறுத்தலை ஒழிப்பதற்கான உலகளாவிய நிகழ்ச்சி நிரலை செயல்படுத்துமாறு நான் உங்களை கௌரவத்துடன் அழைக்கிறேன். இந்த கடத்தல்காரர்களுக்கு எதிராக சட்டத்தை கடுமையாக அமுல்படுத்துதல், அத்தகைய கடத்தல்காரர்கள் தத்தமது நாடுகளுக்கு குடிபெயர்வதைத் தடுத்தல் மற்றும் இந்த போதைப்பொருட்களுக்கு அடிமையானவர்களின் மறுவாழ்வு மையங்களை நிறுவுதல் போன்ற அநேக விடயங்களை உங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்:

ஊழலுக்கு எதிரான போராட்டம் ஒவ்வொரு நாட்டின் கலாச்சாரத்தின் ஒரு அங்கமாக இருக்க வேண்டும்

கௌரவ தலைவர் அவர்களே, மதிப்புமிக்க விருந்தினர்களே, ஊழல் என்பது சமூகத்தில் பரவலான அழிவு மற்றும் சோகத்தை ஏற்படுத்தும் ஒரு நயவஞ்சக தொற்றுநோய் என்று நாங்கள் கருதுகிறோம். ஊழல் என்பது அபிவிருத்திக்கு ஒரு தடையாக இருப்பது எங்கள் நிலைப்பாடு. இது ஜனநாயகம் மற்றும் உலக நல்வாழ்வுக்கு ஒரு முக்கியமான அச்சுறுத்தல் மற்றும் வறுமைக்கு ஒரு காரணம் என்பது எமது நிலைப்பாடாகும். ஊழலுக்கு எதிரான போராட்டம் ஆபத்தானது. ஆனால் ஊழலுக்கு எதிராகப் போராடாதிருப்பது இன்னும் ஆபத்தானது என்பதை மிகுந்த மரியாதையுடன் உங்களுக்கு நினைவூட்ட விரும்புகிறேன்.

1948 ஆம் ஆண்டு மனித உரிமைகள் பிரகடனம் உலகில் மனித சமூகத்திற்கு ஒரு பெரிய வெற்றியைக் கொண்டு வந்தது. மனித நாகரிகத்தின் பல்வேறு சாதனைகள் ஒரே இரவில் கிடைத்துவிடவில்லை. இவை அனைத்தும் மகத்தான தியாகம் மற்றும் விடாமுயற்சியின் பெறுபே-றுகள். ஊழலுக்கு எதிரான போராட்டம் ஒரு கடினமான முன்னெடுப்பாகும். ஆனால் நாம் அந்த முன்னெடுப்பை மேற்கொள்ள வேண்டும். நாம் எடுக்கும் முதல் படி கடி-னமாக இருக்கலாம். ஆனால் நாம் தைரியமாக எடுக்கும் படி சரியானதாக இருந்தால், அதனை பின்தொடர்ந்து ஆயிரக்கணக்கான பல படிகள் எடுத்துவைக்கப்படும் என்று நான் நம்புகிறேன். தைரியமாக இருங்கள் எஞ்சிய அனைத்தும் தானாக நடக்கும் என்ற ஜவகர்லால் நேருவின் கருத்தை இத்தருணத்தில் நான் நினைவுபடுத்துகிறேன்.

நான் சுமார் 22 மில்லியன் மக்கள் தொகை கொண்ட ஒரு சிறிய, பிரகாசமான தீவை பிரதிநிதித்துவப்படுத்துகிறேன். இலங்கையின் மக்கள் தொகை மொத்த உலக மக்கள்தொகையில் சுமார் 0.3மூ ஆகும். நமது நாட்டின் மக்கள் தொகை அளவு மற்றும் எண்ணிக்கையின் அடிப்படையில் சிறியது என்பது உண்மைதான். ஆனால் நமது நாட்டிற்காகவும் உலகத்திற்காகவும் எதிர்கால சந்ததியினருக்காகவும் ஊழலுக்கு எதிரான போராட்டத்தை தொடங்கியுள்ளோம். ஊழலுக்கு எதிரான போராட்டம் ஒவ்வொரு நாட்டின் கலாச்சாரத்தின் ஒரு பகுதியாக இருக்க வேண்டும் என்று நான் முன்மொழிகிறேன்.

நீங்கள் எந்த நாட்டை பிரதிநிதித்துவப்படுத்தினாலும், அனைத்து பிரதிநிதிகளும் யுத்தத்தை நிராகரிப்பதில் என்னுடன் கைகோர்ப்பார்கள் என்று நான் உறுதியாக நம்புகிறேன். உலகில் யுத்தத்தை விரும்பும் எந்த தேசமும் கிடையாது.எங்காவது எப்படியாவது யுத்தமோ அல்லது. மோதலோ ஏற்படும் போதெல்லாம் அது ஒரு துயரம் என்பதை நாங்கள் அறிவோம். இப்போதும் கூட, அந்த துயரத்தின் வலி உலகின் பல பகுதிகளிலும் உணரப்படுகிறது.

மூன்று தசாப்தங்களுக்கும் மேலாக யுத்தத்தின் கசப்பான அனுபவத்தை அனுபவித்த ஒரு நாடாக, அதன் அழிவை நாம் நன்கு அறிவோம். யுத்தத்தினால் உயிரிழந்த ஆயிரக்கணக்கானவர்களின் நினைவிடங்களுக்கு வரும், அவர்களின் பெற்றோர், குழந்தைகள் மற்றும் மனைவியர் எழுப்பும் வேதனையான வேண்டுகோள்களைப் பார்க்கும் எவரும், யுத்தத்தைப் பற்றி கனவு காணக்கூட தயங்குகிறார்கள். அந்த வேதனையான காட்சியை நாம் நம் இரு கண்களால் பார்த்திருக்கிறோம். மோதல்களால் ஏற்படும் துன்பங்கள் முன்னெப்போதும் இல்லாத அளவை எட்டவில்லை என்றாலும், மில்லியன் கணக்கான மக்களின் துன்பத்தை முடிவுக்குக் கொண்டுவர தவறி பெரும்பாலும் சர்வதேச சமூகம் வெறும் பார்வையாளராகவே இருந்து வருகிறது.

குழந்தைகள் மற்றும் அப்பாவி பொதுமக்களின் வாழ்க்கையை ஒரு கால்பந்தாட்டமாக மாற்றுவது சந்தர்ப்பவாத அதிகா-ர அரசியலின் துயரமாகும். மற்றவர்களின் வாழ்க்கையை தங்கள் அதிகாரத்தை அதிகரிக்க செல்வாக்கு செலுத்தவும் ஒடுக்கவும் யாருக்கும் உரிமை கிடையாது.
(தொடர்ச்சி 21ம் பக்கம்)

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# வட இலங்கையில் பணியாற்றும் நேர்மையற்ற கல்வி அதிகாரிகளுக்கு நீதிமன்றம் மூலம் பாடம் புகட்டிய வேம்படி பெண்கள் பாடசாலை!

பு. கஜிந்தன்



வடக்கு கல்வி அதிகாரிகளுக்கு நீதிமன்றம் மூலம் பாடம் புகட்டிய வேம்படி பெண்கள் கல்லூரி அதிபரையும் ஆசிரியப் பெருந்தகைகளையும் பாராட்டும் யாழ்ப்பாண பெற்றோர் சமூகம்.

பிள்ளைகளுக்கு நீதியையும் நேர்மையையும் நடுநிலையையும் போதிக்க வேண்டிய அதிகாரிகள் ஏதும் அறியாத பிள்ளைகளின் திறமைகளில் விளையாடிய கல்வி உயர் அதிகாரிகளுக்கு நீதிமன்றம் தக்க பாடத்தை புகட்டியுள்ளது.

மாகாண மட்ட தமிழ்த்தினப் போட்டி நிகழ்ச்சியில் பக்கசார்பாக நடந்து கொண்டமை தொடர்பாக வடக்கு மாகாண உயர் நீதிமன்றத்தால் வடக்கு மாகாண கல்வித் திணைக்கள அதிகாரிகள் மூவருக்கு எதிராக தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளதுடன் குறித்த வழக்கு செலவினை செலுத்த வேண்டும் எனவும் கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மேற்படி விடயம் தொடர்பாக தெரியவருவதாவது, மாகாண மட்ட தமிழ்த்தினப் போட்டியில் சங்கீத போட்டியில் வேம்படி மகளீர் கல்லூரி இரண்டாம் இடத்தினை பெற்றுக்கொண்டதுடன் ஹார்ட்லி கல்லூரி முதல் இடத்தினை பெற்றுக்கொண்டதாகவும் நடுவர் குழுவினால் அறிவிக்கப்பட்டது.

எனினும் சுற்றுநிருபத்தில் குறிப்பிட்டபடி ஹார்ட்லி கல்லூரி மாணவர்கள் பாடிய பாடலில் பதவர்ணம் காணப்படாததால் குறித்த போட்டியில் இருந்து அவர்களை தகுதி நீக்கம் செய்து தமக்கு முதல் இடம் தரப்படல் வேண்டும் என்று வேம்படி மகளீர் கல்லூரி அதிபரால் மாகாணக் கல்வித் திணைக்களத்திற்கு மேன்முறையீடு செய்யப்பட்டது.

எனினும் போட்டி மேன்முறையீட்டு சபை தலைவர் மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் லாவண்யா, தமிழ் பாட பிரதிக் கல்விப் பணிப்பாளர் கவிதா மற்றும் அப்போதைய மாகாணக் கல்விப் பணிப்பாளர் பிரட்லீ ஆகியோரால் குறித்த மேன்முறையீடு எவ்வித நடுநிலையான விசாரணைகளும் இன்றி நிராகரிக்கப்பட்டது.

ஹார்ட்லி கல்லூரி சார்பாக பங்குபற்றிய அணியில் வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தில் கடமை புரியும் இரண்டு பிரதிக் கல்விப் பணிப்பாளர்களின் பிள்ளைகள் மற்றும் வலயக் கல்விப் பணிப்பாளர் ஒருவரின் பிள்ளை பங்கு பற்றியமையால் தான் இவ்வாறான பக்கச் சார்பான தீர்மானம் மேற்கொள்ளப் பட்டதா என்ற சந்தேகம் பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு எழுந்தது.

இதனால் பாதிக்கப்பட்ட மாணவர்களின் பெற்றோரினால் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. வழக்கு விசாரணை தொடங்கிய நாள் முதலே தமது பிழைகளை மறைக்க பல முயற்சிகளை மாகாணக் கல்வித் திணைக்கள அதிகாரிகள் மேற்கொண்டனர். எனினும் சட்டத்தரணிகள் வாதத்தால் நீதிமன்றம் மாகாணக் கல்வி அதிகாரிகள் லாவண்யா மற்றும் கவிதா ஆகியோரது செயற்பாடுகள் பக்கசார்பாக காணப்படுவதாக தனது தீர்ப்பில் கூறியதுடன் இனிவரும் காலங்களில் மாணவர் சார்பாக நடைபெறும் எந்த போட்டி நிகழ்ச்சிகளிலும் இவர்கள் பணியாற்ற கூடாது எனவும் நீதிபதி தனது தீர்ப்பில் தெரிவித்ததுடன் வழக்கு செலவு யாவும் இவர்களால் செலுத்தப்படல் வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

எனவே மேற்படி விடயம் தொடர்பில் உரிய நடவடிக்கை எடுத்து எதிர்வரும் காலங்களில் மாணவர்கள் போட்டிகளில் பக்கசார்பான தீர்மானங்களை மேற்கொள்வது தடைசெய்வதற்கான பொறிமுறை ஏற்படுத்தப்படல் வேண்டும். மேலும் நீதி மன்றத்தால் தண்டனை பெற்ற அதிகாரிகளுக்கு எதிராக அரச நிர்வாக விதிகளுக்கு அமைய தண்டனை வழங்கப்படல் வேண்டும் எனவும் பாதிக்கப்பட்ட பெற்றோர் தரப்பினர் சாடுகின்றார்கள்.

# நல்லூரில் அமைந்துள்ள மந்திரிமனையின் அழிவிற்கு "கோடாரிக் காம்பும்" காரணம் - ஈ.பி.டி.பியின் ஊடக செயலாளர் ஸ்ரீகாந் சுட்டிக்காட்டு!



மந்திரிமனை அழிவிற்கு கோடாரிக் காம்பும் காரணம் - ஈ.பி.டி.பியின் ஊடக செயலாளர் ஸ்ரீகாந் சுட்டிக்காட்டியுள்ளார்.

கந்தரோடைக்கு வெளிப்படுத்தும் அக்கறை மந்திரிமனை விவகாரத்தில் செலுத்தப்படுவதில்லை என்று குற்றஞ்சாட்டியுள்ள ஈ.பி.டி பி. ஊடகச் செயலாளர் ஸ்ரீகாந், மந்திரிமனையின் அழிவிற்கு கோடாரி காம்புகளும் சம்மந்தப்பட்டிருப்பதாக தெரிவித்துள்ளார்.

யாழ். ஊடக மையத்தில் 24ம் திகதின்று புதன்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில், எமது பாரம்பரியங்களையும் தொன்மையையும் பாதுகாப்பதற்கு மரபுரிமை சின்னங்கள் பாதுகாக்கப்பட வேண்டியது அவசியமாகும். அதனை பாதுகாக்க வேண்டிய கடப்பாடினை உடைய தொல்லியல் திணைக்களம், தமிழ் மக்கள் சார்ந்த மரபுரிமை சின்னங்களை பாதுகாப்பதில் போதிய அக்கறை செலுத்துவதில்லை என்ற விமர்சனம் இருக்கின்றது.



கடந்த காலங்களில் ஆட்சியில் பங்களித்து எமது மக்களின் அபிலாசைகளுக்காக மானசீகமாக உழைக்கின்ற தரப்பு என்ற அடிப்படையில் எமக்கும் தொல்லியல் திணைக்களம் தொடர்பாக விமர்சனங்கள் இருக்கின்றன.

தொல்லியல் திணைக்கள ஆளணி நிரப்பப்படும் போது திட்டமிட்ட முறையில் தமிழ் பேசுவோர் புறக்கணிக்கப்ப ஊடுகின்றனர் என்ற விமர்சனம் இருக்கின்றது.

இதுதொடர்பாக கடந்த காலங்களில் எமது செயலாளர் நாயகம் அவர்கள் சம்மந்தப்பட்டவர்களின் கவனத்திற்கு கொண்டு வருகின்ற சந்தர்ப்பங்களில் எதிர்காலத்தில் தவறு நிவர்த்திக்கப்படும் என்று உறுதியளிக்கின்ற போதிலும், இதுவரை தவறுகள் நிவர்த்திக்கப்படவில்லை. இவை, தொல்லியல் திணைக்களத்தில் திட்டமிட்ட நிகழ்ச்சி நிரல் இருப்பதனையே வெளிப்படுத்துகின்றது.

இவ்வாறான சூழலில், எமது தாயக பிரதேசத்தில் தமிழ் மக்களின் பூர்வீகத்தை பேணிப் பாதுகாக்கும் வகையில், சிதைவடைந்த சங்கிலியன் சிலை புனரமைக்கப்பட்டதுடன், யாழ் மணிக்கூட்டு கோபுரத்தினை சுற்றி தமிழ் மன்னர்களின் சிலைகள், தனிநாயகம் அடிகளாருக்கு சிலை, யாழ். பண்ணையில் தமிழ் மங்கையின் சிலை என்று பல உருவாக்கப்பட்டுள்ளன.

அதேவேளை, எமது மரபுரிமை சின்னங்களை அழிப்பதில் சில கோடாரிக் காம்புகளும் பின்னணியில் செயற்படுகின்றன என்பதுதான வேதனையான விடயம்.

குறிப்பாக, இந்தப் பிரதேசத்தில் மாறி மாறி அதிகாரத்திற்கு வருகின்ற தரப்புக்களுடன் தனக்கு உறவு இருப்பதாக வெளிப்படுத்தி தன்னுடைய வர்த்தகத்தினை வளப்படுத்துவதில் விண்ணாதி விண்ணனான ஒரு வர்த்தகர், மந்திரிமனை அழிவிற்கும் காரணமாக இருக்கின்றது.

மந்திரிமனை வளாகத்தில் நீண்டகாலமாக காணப்படுகின்ற குறித்த வர்த்தகரின் வாகனத் தரிப்பிடத்தில் நிறுத்தப்பட்டுள்ள குறித்த வர்த்தகரின் கனரக வாகனங்களினால் ஏற்படும் அதிர்வுகளும் மந்திரிமனை அழிவிற்கு காரணமாக இருக்கின்றது என்று பல வருடங்களாக சுட்டிக்காட்டப்படுகின்றது.

வடக்கு மாகாண சபையிலும் பிரஸ்தாபிக்கப்பட்டிருந்தது. எனினும் சம்மந்தப்பட்ட தரப்புக்கள் உள்நோக்கம் காரணமாக இதுவரை உரிய நடவடிக்கை எடுக்கவில்லை.

எனவே, ஊழல் அற்ற ஆட்சி, அனைவருக்கும் சமத்துவமான எதிர்காலம் போன்ற நம்பிக்கையை மக்கள் மத்தியில் பரப்பி வருகின்ற தற்போதைய அரசாங்கம், தமிழ் மக்கள் சார்ந்த மரபுரிமை சின்னங்களை பாதுகாப்பதற்கு, காணப்படும் தடைகள் மற்றும் திட்டமிட்ட நிகழ்ச்சி நிரல் தொடர்பாக அவதானம் செலுத்தி உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதை வலியுறுத்த விரும்புகின்றோம்." என்றார்.

இதனிடையே போதைப்பொருள் தொடர்பில் அரசு எடுக்கும் நடவடிக்கை குறித்து கருத்து கூறுகையில் - போதையற்ற தேசமாக இந்நாடு உருவாக்கப்பட வேண்டும், போதை கடத்தலில் விற்பனையில் ஈடுபடுபவர்களை இல்லாதொழிக்க வேண்டும் என்பதே எமது கட்சியின் நிலைப்பாடு.

இதை கடந்த காலங்களில் இருந்த அரசுகள் முன்னெடுத்து வந்தபோதும் இன்றைய அரசு சற்று வேகத்துடன் முன்னெடுத்து வருகின்றது.

இதனால் பல முக்கிய புள்ளிகள் கைதாகியும் அதிகளவிலான போதைப்பொருட்கள் பிடிபட்டும் வருகின்றன. அதவகையில் அரசின் இந்த முயற்சி வரவேற்கத்தக்கது.

குறித்த செயற்பாட்டை அரசு தொடர்ந்து முன்னெடுத்து நாட்டில் போதையை இல்லாதொழிக்க முயற்சிக்க வேண்டும் என்றும் தெரிவித்தார்.

# தியாக தீபம் திலீபனின் நினைவேந்தல் வாரத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தில் இடம் பெற்ற இரத்ததான முகாம்!




தமிழர் தாயகம் எங்கும் தியாக தீபம் திலீபனின் நினைவேந்தல் வாரமானது உணர்வு ரீதியாக அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது.

அந்தவகையில் "உயிர் கொடுத்த உத்தமனுக்காய் உதிரம் கொடுப்போம்" எனும் தொனிப்பொருளில் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் மற்றும் மாணவர் ஒன்றியத்தால் இரத்ததான முகாம் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த இரத்ததான முகாமானது செப்டெம்பர் 24ஆம் திகதி மு.ப 9.00 மணி தொடக்கம் பி.ப 3.00 மணிவரை முன்னெடுக்கப்படவுள்ளது. எனவே அனைத்து தரப்பினரையும் இந்த இரத்ததான முகாமில் பங்கெடுக்குமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

உலக செய்திகள்
World News

# தமிழ்நாடு திருச்சியிலிருந்து வெளிவரும் "இனிய நந்தவனம்" டென்மார்க் சிறப்பிதழ் வெளியீட்டு விழா மூளாய் மறுமலர்ச்சி மையத்தில் நடைபெற்றது

தமிழ்நாடு திருச்சியிலிருந்து வெளிவரும் மாத இதழான "இனிய நந்தவனம்" டென்மார்க் சிறப்பிதழ் வெளியீட்டு விழா 20ம் திகதி சனிக்கிழமையன்று மூளாய் மறுமலர்ச்சி மையத்தில் நடைபெற்றது. மென்மார்க் தேசத்தில் வாழும் மூளாயை பிறப்பிடமாகக் கொண்ட நடன ஆசிரியையும் சமூக சேவகியுமான ஆர் சசிதேவி அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட இந்த நிகழ்வில் பல முக்கிய பிரமுகர்கள் கலந்து சிறப்பித்தனர். அன்றையதினம் (20) பி.ப 4.00 மணியளவில் எழுக மூளாய் மறுமலர்ச்சி மையத்தில் நடைபெற்றது.







மங்கல விளக்கேற்றி வைக்கப்பட்டு இறை வணக்கத்துடன் நிகழ்வு ஆரம்பமானது. அதனைத் தொடர்ந்து வரவேற்புரை, தலைமையுரை, வாழ்த்துரை, விருந்தினர்களின் உரைகள் என்பன இடம்பெற்றன. அதனைத் தொடர்ந்து நூல் வெளியீடு இடம்பெற்றது. முதற்பிரதியை மூளாய் கிராம சேவகர் சிவரூபன் பெற்றுக்கொண்டார். அதனை தொடர்ந்து சிறப்பு பிரதிநிதிகள் வழங்கி வைக்கப்பட்டன.

சி.சிவமோகன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக யாழ். இந்திய துணை தூதரக கலாச்சாரம், அபிவிருத்தி மேலதிக அதிகாரி ஸ்ரீ.சங்கரன் ராஜகோபால் கலந்து சிறப்பித்துடன், சைவ மதகுருக்கள், பாடசாலை அதிபர்கள், கிராம சேவகர் சிவரூபன், எழுக மூளாய் மறுமலர்ச்சி மையத்தினர் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் இதில் கலந்துகொண்டனர்.

# எதிர்கால சந்ததியினருக்குப் பாதுகாப்பான உலகை உருவாக்க முழு மனதுடன் உறுதியெடுப்போம்...

(19ம் பக்கத் தொடர்ச்சி)

ஆட்சியாளர்களின் பங்கு உயிர்களை அழிப்பது அன்றி, உயிர்களைப் பாதுகாப்பதாகும்.

காஸா பகுதியில் நடந்து வரும் கொடூரமான பேரழிவு எங்களுக்கு ஆழ்ந்த கவலையை ஏற்படுத்துகிறது. குறிப்பாக, காஸா பகுதி ஒரு வேதனையான மற்றும் சோகமான திறந்தவெளி சிறைச்சாலையாக மாறியுள்ளது. அப்பாவி குழந்தைகள் மற்றும் பொதுமக்களின் அவலக் குரல்கள் நாளாபக்கமும் கேட்கின்றன . ஐக்கிய நாடுகள் சபை மற்றும் ஏனைய அனைத்து தரப்பினர்களின் உடன்பாட்டின் படி, இரு தரப்பினரும் உடனடியாக போர்நிறுத்தம் செய்ய வேண்டும். அனைத்து மனிதாபிமான உதவிகளையும் தடையின்றி அணுக வேண்டும். அனைத்து தரப்பினரும் பணயக்கைதிகளை விடுவிக்க வேண்டும் என்று நாங்கள் குரல் கொடுக்கிறோம். இந்த கொடூரமான கொலைகளை முடிவுக்குக் கொண்டுவர நாம் வலுவான அழுத்தத்தை கொடுக்க வேண்டும்.

பலஸ்தீன நாடொன்றுக்கான பிரிக்க முடியாத உரிமையை நாங்கள் அங்கீகரிக்கிறோம். அதே போன்று இஸ்ரேலிய மற்றும் பலஸ்தீன மக்களின் நியாயமான பாதுகாப்பு மற்றும் மனிதாபிமான பிரச்சினைகளை அடையாளங் காண வேண்டும் . 1967 எல்லைகளில் இரண்டு நாடுகள் அருகருகே இருப்பதற்கான அடிப்படையை வழங்கும் ஐக்கிய நாடுகள் சபையின் தீர்மானங்களின்படி ஒரு நியாயமான மற்றும் நீடித்த தீர்வைத் தேடுவதில் நாம் இணைய வேண்டும். அர்த்தமற்ற போர் காரணமாக உலகெங்கிலும் உள்ள மில்லியன் கணக்கான மக்களின் வேதனைக்கு முன்பாக வெறும் பார்வையாளராக இருப்பதை முடிவுக்குக் கொண்டுவர வேண்டிய ஒரு முக்கியமான தருணத்தை நாம் அடைந்துவிட்டோம். உலகைப் பாதிக்கும் யுத்த மோதல்களுக்கு மத மற்றும் இனவாதம் பாரதூரமான காரணிகளாக உள்ளன.

அடிமைத்தனம் ஒழிக்கப்பட்டு ஒரு நூற்றாண்டுகள் கடந்த பிறகும், இனவெறியின் வி'ம் இன்னும் ஆங்காங்கே உள்ளது என்பதை மீண்டும் மீண்டும் நினைவுபடுத்த வேண்டும். தீவிரவாத மற்றும் இனவாதக் கருத்துக்கள் கொடிய தொற்றுநோய்களைப் போலவே கொடியதாக மாறிவிட்டன. இவ்வளவு முற்போக்கான உலகில் கூட, இந்த இனவெறி மற்றும் இனவாதக் கருத்துக்கள் சாம்பலுக்கு அடியில் உள்ள தீப்பொறிகள் போல இருப்பது நகைப்பிற்கும் ஆச்சரியத்திற்கும் உரிய விடயமாகும். மிகவும் பயங்கரமான சூழ்நிலை என்னவென்றால், அந்த தீப்பொறிகள் அவ்வப்போது, சந்தர்ப்பவாதமாக, பிரபஞ்சத்தின் நல்வாழ்வுக்கு எதிராக பெரும் தீப்பிழம்பாக மாற்றப்படுகின்றன.

உலக சமாதான குடியேற்றங்களை உருவாக்கும் உன்னத சமாதான யாத்ரீகர்களாக மாறுவோம்.

ஆயுதங்கள் மூலம் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குப் பதிலாக, மனித நாகரிகத்தின் மதிப்புகள் மூலம் பிரச்சினைகளைத் தீர்க்கும் திறனுக்குள் நாம் பிரவேசிக்க வேண்டும். மில்லியன் கணக்கான குழந்தைகள் பசியால் இறக்கும் உலகில், நாம் பில்லியன் கணக்கான பணத்தை ஆயுதங்களுக்காக செலவிடுகிறோம். சரியான சுகாதார வசதிகள் இல்லாமல் மில்லியன் கணக்கான மக்கள் மரணத்தின் பாதையைத் தேர்ந்தெடுக்கும்போது, அர்த்தமற்ற போர்களுக்கு பில்லியன்களை செலவிடுகிறோம்.

இலட்சக்கணக்கான குழந்தைகள் கல்வி எனும் சிறகுகள் கிடைக்காமல் பெருமூச்சு விடும்போது, நாம் மில்லியன் கணக்கில் நில ஆக்கிரமிப்புகளுக்கு செலவிடுகிறோம். உண்மையில், இந்த உலகில் உள்ள ஒவ்வொரு அங்குல நிலத்தையும் அமைதி எனும் குடியேற்றமாக மாற்ற முடிந்தால், அந்த உலகம் ஒரு அற்புதமான உலகமாக மாறும் என்று நாங்கள் உண்மையிலேயே நம்புகிறோம். இந்த மாநாட்டில் இணைந்த நாம் அனைவரும் உலக சமாதான குடியேற்றங்களை உருவாக்கும் உன்னத சமாதான யாத்ரீகர்களாக மாற வேண்டும் என்று நான் முன்மொழிகிறேன்.

ஒரு வரலாற்று முக்கியமான தேர்தலில், இலங்கை மக்கள் பல நூற்றாண்டுகளாக தங்கள் மனதில் இருந்த ஒரு கனவிற்காக தீர்மானம் எடுத்தார்கள் என்பதை நான் உங்களுக்கு நினைவூட்ட விரும்புகிறேன். இதன் விளைவாக சட்டவாக்கம் பன்முகத்தன்மை கொண்டது . ஒருபுறம், நாட்டின் முழு மக்களும் அரசாங்கத்தின் மீது மிகுந்த நம்பிக்கை வைத்தனர். மறுபுறம், கட்புலனற்ற பாராளுமன்ற உறுப்பினர் உட்பட பெண்கள் மற்றும் ஏனைய இனக்குழுக்களின் பிரதிநிதித்துவம் ஒரு வரலாற்று மைல்கல்லை உருவாக்கியது. பாராளுமன்றத்தில் உள்ள இந்த பன்முகத்தன்மை இலங்கையின் ஆட்சியில் இன பன்முகத்தன்மையை உறுதி செய்கிறது .அனைத்து பிரஜைகளுக்கும் சம உரிமைகள் மற்றும் வாய்ப்புகளை வழங்குவதற்கான எங்கள் உறுதிப்பாட்டை மீண்டும் உறுதிப்படுத்துகிறது.

அதேபோன்று மக்கள் பிரதிநிதிகள் என்பது பொதுமக்களுக்காக சேவையாற்றும் ஊழியர்கள் அன்றி தேவையற்ற சலுகைகளைப் பெறுபவர்கள் அல்ல என்பதற்கு நாங்கள் ஒரு முன்மாதிரியை காட்டியுள்ளோம். மக்கள் பிரதிநிதிகளின் பொறுப்பு நாட்டையும் மக்களையும் மேம்படுத்துவதாக இருக்க வேண்டும், தங்களைத் தாங்களே வளர்த்துக் கொள்வது அல்ல என்று நாங்கள் கருதுகிறோம்.

இருளுக்கு பதிலாக ஒளியின் பாதையைத் தேர்ந்தெடுத்த நமது நாட்டு மக்கள், "வளமான நாடு - அழகான வாழ்க்கை" என்ற நடைமுறை தொலைநோக்குப் பார்வைக்கு தங்கள் ஆசிர்வாதத்தை வழங்கியுள்ளனர். இந்த வரலாற்று சாதனையை நனவாக்க, ஊழல் இல்லாத நெறிமுறையான ஆட்சி, வறுமை ஒழிப்பு, டிஜிட்டல் மயமாக்கல் மற்றும் சுத்தமான நாடு ஆகிய முக்கிய துறைகளில் எங்கள் கவனத்தை செலுத்தியுள்ளோம். அதனுடன் இணைந்ததாக , கல்வி மற்றும் சுகாதாரம் குறித்து நாங்கள் அதிக கவனம் செலுத்தியுள்ளோம். அவை அனைத்தையும் படிப்படியாக வென்று வருகிறோம்.

இன்று, டிஜிட்டல் ஜனநாயகம் எங்கள் புதிய இலக்காகும். ஒவ்வொரு தனிநபரும் ஒவ்வொரு நாடும் டிஜிட்டல் யுகத்தின் வாய்ப்புகளை அணுக முடியும் என்பதை உறுதி செய்வதே உலகின் முன் உள்ள

சவாலாகும். அதில் நாம் வெற்றி பெற்றால், தொழில்நுட்பத்திற்கான பிரவேசம் திறக்கப்படுவதையும் அபிவிருத்தி துரிதப்படுத்தப்படுவதையும் ஆட்சி பலப்படுத்தப்படுவதையும் தவிர்க்க முடியாது. ஆனால் நாம் அவ்வாறு செய்யத் தவறினால், தொழில்நுட்பம் சமத்துவமின்மை, பாதுகாப்பின்மை மற்றும் அநீதிக்கு வழிவகுக்கும் மற்றொரு சக்தியாக இது மாறும் என்று நாங்கள் கருதுறோம்.

டிஜிட்டல் கருவிகளை அணுக முடியாத நாடுகளுக்கு இடையே டிஜிட்டல் பிளவு தெளிவாகத் தெரிகிறது. செயற்கை நுண்ணறிவுத் துறையில் இன்னும் பாரிய இடைவெளி உருவாகி வருகிறது. இலங்கை உட்பட தெற்காசியாவின் பல நாடுகளிலும், உலகெங்கிலும் உள்ள பல நாடுகளிலும், அபிவிருத்திக்கான கருவியாக செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்துவதற்கு உள்கட்டமைப்பு வசதிகள் குறைவாக இருப்பது தடையாக உள்ளது.

மிகச் சிறந்த உலகத்தை உருவாக்குவோம்

நாம் மிகச் சிறந்த உலகத்தை, மனிதர்களின் நித்திய கௌரவத்தை மதிக்கும் உலகத்தை உருவாக்க வேண்டும். இந்த மாநாட்டின் உறுப்பினர்களான நீங்கள், ஒரு சிறந்த உலகத்தை உருவாக்குவதற்கான சிற்பிகளாக இருக்க வேண்டும். 1945 இல் ஐக்கிய நாடுகள் சபையை நிறுவும் சாசனத்தில் கையெழுத்திட்டபோது அமெரிக்க ஜனாதிபதி ஹரி எஸ். ட்ரூமன் கூறியது போல், நமது எதிர்காலம் உங்கள் கைகளில் உள்ளது. நாம் அச்சம் அல்லது கடப்பாட்டுக்கு உட்படாமல் நம்பிக்கையை முன்னிறுத்தி செயல்பட வேண்டும். உலகை பேரழிவிற்கு இட்டுச் செல்வதற்குப் பதிலாக, எதிர்கால சந்ததியினருக்கு பாதுகாப்பான உலகத்தை உருவாக்க உறுதிபூண்டுள்ள ஒரு தலைமுறையாக மாற இந்த உச்சிமாநாட்டில் தீர்மானிப்போம்.

இறுதியாக, எனக்கு என் நாட்டின் மீது நம்பிக்கையின் கனவு இருக்கிறது. உங்களுக்கும் உங்களுடைய நாடுகள் தொடர்பில் நம்பிக்கையின் கனவு இருக்கிறது. எனது ஒரே கனவு, என் நாட்டு மக்களுக்கு மகிழ்ச்சியான மற்றும் வளமான வாழ்க்கையை வழங்குவதுதான். உங்கள் நாட்டு மக்களுக்கும் இதே போன்ற வாழ்க்கையை வழங்குவதே உங்கள் கனவு என்று நான் நம்புகிறேன். அந்தக் அனைத்துக் கனவுகளுக்காகவும் நம்மைப் பிரிக்கும் பயணத்திற்குப் பதிலாக, கைகளை இணைக்கும் பயணத்தை மேற்கொள்ள வேண்டும் என்று நாங்கள் நம்புகிறோம்.

ஆரோக்கியமான பூகோளத்தில் அமைதி, கண்ணியம் மற்றும் சமத்துவத்திற்கு அர்ப்பணிப்போம் என்று ஐக்கிய நாடுகள் சபையின் குறிக்கோளில் குறிப்பிடப்பட்டுள்ளது. உலகத்தை உண்மையாகவே மாற்றியமைப்பவர்களாகுவோம் என நான் உங்களை மரியாதையுடன் அழைக்கிறேன்.

மிக்க நன்றி.

இவ்வாறு இலங்கை ஜனாதிபதி ஐக்கிய நாடுகள் சபையில் இலங்கை ,ஜனாதிபதி அநுர குமார திசநாயக்க உலகத் தலைவர்கள் மத்தியில் உரையாற்றும் பல் வேறு எண்ணங்களைப் பகிர்ந்து கொண்டார்.



# MORTGAGE
## FINANCIAL SOLUTIONS

COMMERCIAL · RESIDENTIAL · VACANT LAND · INDUSTRIAL · CONSTRUCTION



## OUR SERVICE

- Purchase
  - Builder Purchase
  - MLS Purchase
  - Private Purchase
- Equity line of Credit
- Refinance
- Renewal



CALL US

**NESAN**
**416-908-5656**

Office: 416-660-5656
Fax: 647-351-3099
Toll: 1-844-878-2721

www.nesan.ca

**WE DEAL WITH ALL BANKS**

CityCan Financial Corporation
NESAN SUBRAMANIAM
Mortgage Agent level 1 Licence # M15001465
CityCan Financial Corporation, Brokerage #10332

Scotiabank · TD Canada Trust · National Bank · RFA · First National Financial LP · Manulife · Desjardins · MCAP · Home Trust · Equitable Bank · radius financial · RMG mortgages

55 EGLINTON AVE E SUITE 604, TORONTO, ON M4P 1G8

VILLA KARUNA HOME FOR SENIORS

HELPING HANDS SENIOR CARE VILLA KARUNA

சந்தியாராகம் Santhiyaragam

# SANTHIYARAGAM 2025

## GOLDEN SUPER SINGER SEASON 7

## GRAND FINALE



TITLE SPONSOR

COMPUTEK COLLEGE
EST. 1991
BUSINESS • HEALTH CARE • TECHNOLOGY

POWERED BY

Value Plus PHARMACY
For all your medical drug needs

MUSIC BY

The WIND
Nothing but music !

CO-SPONSORS

THE ARULDASON GROUP
Realty . Legal . Financial

Chapel Ridge
FUNERAL HOME
CREMATION CENTRE

FIN Mortgage

OPTIMART

LIVECOVERAGE

LIVE TELECAST Krishna

EVENT SPONSORS

Liberty@Kennedy Tax and Accounting
Professional Accurate Guaranteed
OVER 30+ YEARS OF EXPERIENCE

பசுமை
A Mini Market
Grocery Vegetable & More...

AKT FRESH MEAT & SEA FOOD
PREMIUM QUALITY

5 STARS
5 Star Beauty Parlour

LOTUS
Funeral and Cremation Centre Inc.

JRS COLLEGE
of Business & Healthcare
Estd. 2008

MEDIA PARTNERS

Canadian Tamils' Business Directory
TAMILS' GUIDE
Athavan Publications Inc.
www.tamilsguide.com

தமிழ் TORONTO TAMIL

செந்தாமரை Senthamarai

east FM 102.7

TM தமிழ் மிரர் Tamil Mirror
MIRROR THAT REFLECTS THE TAMIL COMMUNITY

time FM

yugam radio

உதயன் www.uthayannews.ca

M 24 தமிழ் HD

TICKETS: 60$

SEPT 27 2025, 4.30PM

Tamil Isai Kalaamanram, 1120 Tapscott Rd #3,
Scarborough, ON, M1X 1E8

FOR TICKETS & MORE INFO:
Kiruba: 416-564-4366/ Inthu/Para: 416-282-4535/ Indrani: 416-200-6971

மொன்றியல் நகரில்
உதயன் UTHAYAN
விளம்பரங்கள், மரண அறிவிததல்கள், பிறந்ததின வாழ்த்துக்கள், உள்ளூர்ச் செய்திகள் மற்றும் அறிவித்தல்களைக் கையளிக்க நாடுங்கள்.
FRUITS HABY
பசுமையான மரக்கறி வகைகள் மற்றும் பழவகைகளுக்கு மொன்றியலில் புகழ்பெற்ற தமிழர் ஸ்தாபனம்
5925 Victoria
Montreal, QC
H3W 2R9
514-342-4229
514-865-0519

மதுரை ஸ்ரீ மீனாட்சி அம்மன் துணை
மதுரையில் இருந்து மீண்டும் வருகை
ஜாதகம் பார்க்கப்படும்
பிறந்த வருடம், மாதம், திகதி சொன்னால் போதும் நாள், நட்சத்திரம், ராசி பார்த்து நடந்தது நடக்கப்போவது பற்றிய பலன் சொல்லப்படும். திருமணப் பொருத்தம் மற்றும் குழந்தைகளுக்கு குறிப்பு எழுதிக் கொடுக்கப்படும்.
கோ. காசி (மதுரை) Phone:- 437-925 5643 Whatsapp:- 437- 329 4164

Matt Mathisayan
Sales Representative
647 268 9219
905 201 9977
905 201 9929
mattmathisayan@gmail.com
Follow me on
HomeLife/Future Realty Inc.
7 Eastvale Dr #205, Markham, On L3S 4N8

26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN உதயன்

தமிழ் நிர்வாகத்தில் இயங்கும் நிறுவனம்
RIDE-U
• Airport
• Niagara Falls
• Ottawa
• Montreal
• Quebec City
• USA
rideu2025@gmail.com
(416)789-6556
BOOK NOW

உதயம் 1538 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday September 26, 2025

# ஸ்காபுறோ "தமிழ் சமூக மையத்தின்" கட்டட திட்டத்திற்கு நிதி சேகரிக்கும் வகையில் கனடாவில் செயற்படும் தாயகப் பாடசாலைகளின் பழைய மாணவர் சங்கங்கள் இணைந்து நடத்திய வைபவத்தில் 400,000 டாலர்களுக்கு மேல் திரட்டப்பெற்றது








கனடாவில் அமையவுள்ள "தமிழ் சமூக மையத்தின்" கட்டட திட்டத்திற்கு நிதி சேகரிக்கும் வகையில் கனடாவில் செயற்படும் தாயகப் உள்ள பாடசாலைகளின் பழைய மாணவர் சங்கங்கள் இணைந்து நடத்திய ஒன்று கூடல் நிகழ்வு கடந்த 20,-09-2025 சனிக்கிழமை அன்று **Brighton Convention Centre** மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது மத்திய அமைச்சர் கரி ஆனந்தசங்கரி- மாகாண பாராளுமன்ற உறுப்பினர்கள் லோகன் கணபதி மற்றும் இணையமைச்சர் விஜேய் தணிகாசலம் மற்றும் ரொறன்ரோ மாநகர முதல்வர் ஒலிவியா சோ ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து சிறப்பித்து வாழ்த்துரைகளை வழங்கிச் சென்றார்கள்.

இந்த நிகழ்வின் போது பல்வேறு பாடசாலை பழைய மாணவர் சங்கங்கள் உயர்தரப் பிரிவு மாணவர் அமைப்புகள் மற்றும் பழைய மாணவர்கள் என அனைவரும் இணைந்து 400,000 டொலர்களுக்கான நிதி உதவி உத்தரவாதத்தை வழங்கியிருந்தனர்.









# கனடா "தமிழோசை வானொலி" ஏற்பாட்டில் டுறம் பிராந்தியத்தில் நடைபெற்ற "தமிழர் திருவிழா"

கனடா தமிழோசை வானொலி ஏற்பாட்டில் கடந்த 20-09-2025 அன்று சனிக்கிழமை டுறம் பிராந்தியத்தில் நடைபெற்ற "தமிழர் திருவிழா" 300 மேற்பட்ட உள்ளூர் மற்றும் பிறநாட்டுக் கலைஞர்களின் பங்களிப்புக்கள் மற்றும் கலைப் படைப்புக்கள் ஆகியவற்றுடன் சிறப்பாக நடைபெற்றது.

மேற்படி சிறப்பான நிகழ்வில் "செவன்நோட்ஸ்" இசைக் குழுவினர் இனிதான இசையை வழங்க சிறியோர் முதல் வளர்ந்தோர் வரை ரசிகர்களை மெய்மறக்கச் செய்யும் பாடல்களை மேடையில் வழங்கினார்கள்.

மேற்படி விழாவைச் சிறப்புச் செய்ய தமிழகத்திலிருந்து பாடகர்கள் முகேஸ் மற்றும் ஜீவன் ஆகியோரும் பிரான்ஸ் தேசத்தில் வாழும் நம்நாட்டுக் கலைஞர்களும் அழைக்கப்பெற்றிருந்தனர்.

அந்த வாரத்தில் கனடாவில் நடைபெற்ற பல மேடை நிகழ்ச்சிகளில் தமிழோசை வானொலி நடத்திய மேற்படி தமிழர் திருவிழா ரசிகர்களை மகிழ்வித்தது என்றால் அது மிகையாகாது.

# வட இலங்கையில் பணியாற்றும் நேர்மையற்ற கல்வி அதிகாரிகளுக்கு நீதிமன்றம் மூலம் பாடம் புகட்டிய வேம்படி பெண்கள் பாடசாலை!



வடக்கு கல்வி அதிகாரிகளுக்கு நீதிமன்றம் மூலம் பாடம் புகட்டிய வேம்படி பெண்கள் கல்லூரி அதிபரையும் ஆசிரியப் பெருந்தகைகளையும் பாராட்டும் யாழ்ப்பாண பெற்றோர் சமூகம்.

பிள்ளைகளுக்கு நீதியையும் நேர்மையையும் நடுநிலையையும் போதிக்க வேண்டிய அதிகாரிகள் ஏதும் அறியாத பிள்ளைகளின் திறமைகளில் விளையாடிய கல்வி உயர் அதிகாரிகளுக்கு நீதிமன்றம் தக்க பாடத்தை புகட்டியுள்ளது.

மாகாண மட்ட தமிழ்த்தினப் போட்டி நிகழ்ச்சியில் பக்கசார்பாக நடந்து கொண்டமை தொடர்பாக வடக்கு மாகாண உயர் நீதிமன்றத்தால் வடக்கு மாகாண கல்வித் திணைக்கள அதிகாரிகள் மூவருக்கு எதிராக தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளதுடன் குறித்த வழக்கு செலவினை செலுத்த வேண்டும் எனவும் கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

(தொடர்ச்சி 20ம் பக்கம்)

2025 மார்க்கம் 7ம் வட்டாரத்தின் இடைத்தேர்தலில் வாக்களிப்பதன் மூலம் உங்கள் விருப்பத்தை பதிவுசெய்யுங்கள்.
September 26 – 29
இப்போது வாக்களியுங்கள்
elections markham
ElectionsMarkham.ca
MARKHAM